# கோபுரம்

தகவல் இதழ்
ஆனி - 1998



34912

இறக்குவானை ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலயம்

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்கள வெளியீடு

# யாழ். மாவட்ட, அருள்நெறி விழாக் காட்சிகள்



விழாவினை, துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திரு. து. வைத்திலிங்கம் ஆகியோர் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைக்கின்றனர்.



நல்லை ஆதீன முதல்வர், சோமசுந்தர தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அருளாசி வழங்குகின்றார்.



கலந்து கொண்ட கூட்டத்தினரில் ஒரு பகுதியினர்.

*அட்டைப்படம் -*

அண்மையில் மகாகும்பாபிஷேகம் நடைபெற்ற இறக்குவானை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தோற்றம், இம்முறை அட்டையில் இடம் பெறுகின்றது. நூறாண்டு காலப் பழைமை மிக்க இவ்வாலயம், தற்போது இராஜகோபுரம், விமானங்கள், எழுந்தருளி மூர்த்திகள், வைரவர், கொடித்தம்பம், பலிபீடம், நந்தி, நவக்கிரகங்கள், சண்டேஸ்வரர், மணிக்கோபுரம், தீர்த்தக்கிணறு ஆகியவற்றுடன் மிகச் சிறப்பாக அமைந்துள்ளது.

ஆலயக் குருக்கள், பரிபாலன சபையினர், பிரதேச இந்து பக்தர்கள், அனைவரும் இணைந்து இவ்வாலயத்தின் வளர்ச்சிக்குப் பெரும் பணி ஆற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கோபுரம்

இந்துசமய, கலாசார
அலுவல்கள் திணைக்கள
வெளியீடு

மலர் - 9 இதழ் - 2

1998

ஈசுவர வருடம் - ஆனி மாதம்

கோபுரம் இதழ் பற்றிய
உங்கள் எண்ணங்களை
கீழ்வரும் முகவரிக்கு எழுதி
அனுப்பி வையுங்கள்.

பணிப்பாளர்,
இந்துசமய, கலாசார
அலுவல்கள் திணைக்களம்,
98, வோட் பிளேஸ்,
கொழும்பு - 7.

## உள்ளே... !

- திணைக்களச் செய்திகள்
- இந்துமத மறுமலர்ச்சியும் சுவாமி விவேகானந்தரும்
- சக்தி வழிபாடு
- யாழ்ப்பாணத்தில் அருள்நெறி விழா
- பக்தி உபந்நியாசம்
- உய்யும் வழியினைப் பேண்மின்
- விரதங்களின் பலன்
- நேரமில்லை
- நீண்ட ஆயுளுக்குத் துளசி
- கீதா உபதேசம்
- காப்பியில் மறைந்த சர்க்கரை
- ஏன் பஜனைப் பாடல்கள் பாட வேண்டும் ?
- உணவும், குண இயல்பும்
- பூஜையும் பயனும்
- ஜபமாலை
- சுகமும், துக்கமும்
- ஏழாவது படி
- வாழ்ந்து பார்க்கலாம் வாருங்கள் !
- நான்கு நிலைகள்
- மனத் தூய்மை பெற வழிகள்

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

# திணைக்களச் செய்திகள்

## களுத்துறை மாவட்ட அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சிக்கருத்தரங்கு

மேற்படி பயிற்சிக் கருத்தரங்கு மார்ச் மாதம் 28 ஆம் திகதி களுத்துறை மாவட்டத்தில் அமைந்துள்ள ஹொரணை பிரதேசத்திலுள்ள எல்லகந்த தமிழ் வித்தியாலத்தில் நடைபெற்றது. இப்பயிற்சிக்கருத்தரங்கில் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள், மாவட்டப் பொறுப்பாளர்கள், விஷேட சிறப்பு விருந்தினர்கள், விரிவுரையாளர்கள், திணைக்கள உயரதிகாரிகள், கலாசார உத்தியோகத்தர், பாடசாலை மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

பாரதி அறநெறிப்பாடசாலையைச் சேர்ந்த மாணவரின் பஞ்சபுராண ஓதலுடன் நிகழ்ச்சி ஆரம்பமாகியது. இதனைத் தொடர்ந்து ஹொரணைப் பிரதேச பொறுப்பாளர் திரு. எம். சிவகணேசமூர்த்தி அவர்கள் வரவேற்புரையினை நிகழ்த்தினார். இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்கள பிரதிப்பணிப்பாளர் திருமதி. சாந்தி நாவுக்கரசன் அவர்கள் தலைமைதாங்கி நிகழ்ச்சியை நடத்தி வைத்தார்.

ஹொரணை மாவட்ட நகர பிதா ரோகண குலசிரி பிரதம விருந்தினராகக் கலந்து உரை நிகழ்த்தினார். தொடர்ந்து எல்லகந்த தமிழ் வித்தியாலய அதிபர் திரு. மனாப் இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப்பணிப்பாளர் திரு. வி. விக்கிரமராஜா ஆகியோரின் சிறப்புரைகள் இடம்பெற்றன.

"சைவ சித்தாந்தம் கூறும் முப்பொருள், சைவ நாற்பாதங்கள்" என்னும் தலைப்பில் அருள்மொழியரசி, ஞானசிரோன்மணி வித்துவான் வசந்தா வைத்தியநாதன் அவர்களும், "இந்து சமய வாழ்க்கையில் தியானமும், பிரார்த்தனையும்" என்னும் தலைப்பில் பிரம்மஸ்ரீ சுப்பிரமணியக் குருக்கள் அவர்களும் "ஆசிரியர் வழிகாட்டி நூலகப் பாடத்திட்டத்தை எவ்வாறு கற்பித்தல்" என்னும் தலைப்பில் மேல் மாகாண தமிழ் மொழிப் பாடசாலை இந்துசமய ஆசிரிய ஆலோசகர் திருமதி. ஹேமா சண்முகசர்மா அவர்களும் விரிவுரைகளை நடத்தினர்.

நிகழ்ச்சியின் நிறைவில், கலந்து கொண்ட அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் இடம்பெற்றது. அத்துடன் 1995, 96ம் ஆண்டில் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட இந்துசமயப் போட்டியில் கலந்து கொண்டு வெற்றிபெற்ற மாணவர்களுக்கு நூல்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

கருத்தரங்கு நிறைவில் பங்குபற்றிய ஆசிரியர்களுக்கு திணைக்களத்தினால் அச்சிடப்பட்ட நூல்கள், சான்றிதழ்கள், உசாத்துணை நூல்கள் போன்றவை வழங்கப்பட்டன. கலாசார உத்தியோகத்தர் திருமதி. நிர்மலா கருணானந்தராஜா அவர்களின் நன்றியுரையுடனும் திருஞானசம்பந்தர் அறநெறிப்பாடசாலை ஆசிரியர் திரு. தேவகுமார் அவர்களின் பஞ்சபுராணத்துடனும் கருத்தரங்கு நிறைவுற்றது.

கே. நிர்மலா
கலாசார உத்தியோகத்தர்.

# புத்தளம், குருநாகல் மாவட்ட அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சிக்கருத்தரங்கு

புத்தளம், குருநாகல் மாவட்ட அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கென திணைக்களம் ஏற்பாடு செய்து நடத்திய ஒரு நாட் கருத்தரங்கு மார்ச் மாதம் 29ம் திகதி, புத்தளம் இந்துமகாசபை மண்டபத்தில் நடைபெற்றது.

உதவிப்பணிப்பாளர் திரு. வீ. விக்கிரமராஜா அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், பணிப்பாளர் திரு. எஸ். தில்லை நடராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். இந்து மகாசபையின் தலைவர் திரு. முருகேசபிள்ளை, உதவிப்பணிப்பாளர் திரு. எஸ். தெய்வநாயகம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர்.

நிகழ்ச்சியில், கலாபூஷணம் உடப்பு எஸ். சோமாஸ்கந்தர் "இந்துசமயம் ஒரு வாழ்க்கை நெறி" எனும் பொருளிலும், "அறநெறிக் கல்விமுறை" எனும் பொருளில், திரு. பி. வடிவேல் அவர்களும், நீதிநூல் கூறும் அறநெறிக் கருத்துக்கள் எனும் பொருளில் திரு. எஸ் தெய்வநாயகம் அவர்களும் உரை நிகழ்த்தினர்.

நிகழ்ச்சியின் நிறைவில் ஆசிரியர் கலந்துரையாடல் இடம்பெற்றது. 95, 96ம் ஆண்டுகளில் திணைக்களம் நடத்திய இந்துசமயப் போட்டிகளுக்கான பரிசளிப்பு வைபவமும் இடம்பெற்றது.

கலாசார அலுவலர் மாத்தளை, பி. வடிவேலன் அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்ச்சிகள் நிறைவுபெற்றன.



இந்துசமயச் சொற்பொழிவு நிகழ்ச்சியில் திருமதி. மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள் உரை நிகழ்த்துவதைக் காணலாம். நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்த வித்துவான் க.ந. வேலன், உதவிப்பணிப்பாளர் குமார் வடிவேல், கூட்டத்தினரில் ஒரு பகுதியினரும் படத்திற் காணப்படுகின்றனர்.

## பாராயணம்

தினசரி பாராயணம் ஓரளவு செய்யணும். அதுக்கு மேலே ஜபம். ஜபத்துக்கு மேலே தியானம். நாலாவது படியாக இருப்பது தியானம். தியானம் பண்றதினாலே மனம் ஒடுங்குகிறது. இன்ப எழுச்சி உண்டாகும்.

- வாரியார் சுவாமிகள்

# கண்டி மாவட்ட பண்ணிசை வகுப்புக்கள்

திணைக்களம் ஏற்பாடு செய்து நடத்திய கண்டி மாவட்ட அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான இருநாட் பண்ணிசை வகுப்புக்கள் ஏப்ரல் மாதம் 4, 5ம் திகதிகளில் பேராதனை வளாக குறிஞ்சிக்குமரன் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது.


கண்டி, கலஹா, புசல்லாவ, கம்பளை, ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 23 அறநெறிப் பாடசாலைகளின் ஆசிரியர்கள் இவ் வகுப்புக்களில் கலந்து கொண்டனர். இவர்களுடன் ஆலய அறங்காவலர்கள், இந்து நிறுவனப் பிரதிநிதிகள், பேராதனை பல்கலைக்கழக இந்து மாணவர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இருதினங்களும், சங்கீத கலா வித்தகர் திரு. வர்ண இராமேஸ்வரன் அவர்கள், பங்குகொண்ட ஆசிரியர்களுக்கு தேவாரம், திருமுறைகள் என்பவற்றில் பயிற்சி வழங்கினார்.

இரண்டாம் நாள், திணைக்கள உதவிப்பணிப்பாளர்கள், திரு. வீ. விக்கிரமராஜா, திரு. எஸ். தெய்வநாயகம், இருவரும் கலந்து சிறப்பித்ததோடு கருத்துரைகளும் வழங்கினர். அத்துடன், அருள்மொழியரசி திருமதி. வசந்தா வைத்தியநாதன் அவர்கள் திருமுறைகளுக்கு விளக்கமளித்தார். நிகழ்ச்சிகளின் நிறைவாக பங்கு கொண்ட ஆசிரியர்களுக்கு, திணைக்கள இலவசவெளியீடுகள் வழங்கப்பட்டன.

இவ்வகுப்புக்களை திணைக்கள கலாசார அலுவலர் திருமதி. இராஜேஸ்வரி அவர்கள் நெறிப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

ஆன்மீக வாழ்க்கை வாழ்ந்து பயன் பெறுவதற்குக் குறுக்கு வழிகள் ஏதும் கிடையாது.




இந்துசமயச் சொற்பொழிவு நிகழ்ச்சியில் பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் உரை நிகழ்த்துவதையும், கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படத்திற் காணலாம்.

நாம் செய்யும் வேலையையே வழிபாடாகக் கருதிக் கொண்டால் வாழ்க்கையே தவமாக மாறிவிடும்.




இந்துசமயச் சொற்பொழிவு நிகழ்ச்சியில், கன்னியாகுமரி வெள்ளிமலை விவேகானந்த ஆசிரமம் ஸ்ரீமத் சுவாமி சைதன்யானந்தாஜி மஹராஜ் சொற்பொழிவு நிகழ்த்தினார். இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனாநந்தா, உதவிப்பணிப்பாளர் திரு. குமார் வடிவேல் ஆகியோர் இறைவணக்கம் செய்வதையும் கூட்டத்தினரில், ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம்.



இலக்கியச் சொற்பொழிவு நிகழ்ச்சியில தமிழருவி த. சிவகுமாரன் அவர்கள் உரை நிகழ்த்துவதையும், நிகழ்ச்சிக்கு தலைமைவகித்த கொழும்பு பல்கலைக்கழக பேராசிரியர் சோ. சந்திரசேகரன், கலாசார சமய அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர் திருமதி. ஆர். கைலாசநாதன், உதவிப்பணிப்பாளர் திரு. குமார் வடிவேல், ஆகியோரையும் கலந்துகொண்டோரின் ஒரு பகுதியினரையும் படத்திற் காணலாம்.

மனிதன் தன்னைத்தானே உயர்த்திக் கொள்வதற்காக உலகின் பல்வேறு மதங்கள் தந்திருக்கும் முறைகள் எந்தக் காலத்துக்கும் பொருத்தமானவை.

# அம்பாறை மாவட்ட அறநெறி ஆசிரியர்களுக்கான சைவசித்தாந்த் வகுப்புக்கள்

திணைக்களத்தின் ஏற்பாட்டில் அம்பாறை மாவட்ட அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கான இரண்டு நாள் சைவசித்தாந்த வகுப்புக்கள், ஏப்ரல் மாதம் 18, 19ம் திகதிகளில் அக்கரைப்பற்று விபுலானந்த மாணவர் இல்லத்தில் நடைபெற்றன.

முதல்நாளன்று, விபுலானந்த சிறுவர் இல்ல இயக்குநர் திரு. த. கைலாய பிள்ளை வரவேற்புரை நிகழ்த்தினார். தொடர்ந்து, கலாசார அலுவலர் திரு. எஸ். மகேந்திரராஜா அவர்களின் தலைமையில் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. உதவிப்பணிப்பாளர் திரு. எஸ். தெய்வநாயகம் சிறப்புரை வழங்கினார்.

தொடர்ந்து சைவப்புலவர் திரு. எஸ். சாமித்தம்பி சைவசித்தாந்தம் எனும் பொருளிலும் பகுதிநேர விரிவுரையாளர் திரு. சு. நடேசு "சைவ சித்தாந்தத்தில் பதி, பசு, பாசம்" எனும் பொருளிலும், ஆசிரிய ஆலோசகர் திரு. ஆ. யோகராசா, "குரு, லிங்க சங்கம வழிபாடு" எனும் பொருளிலும், சைவப்புலவர் திரு. எஸ். சாமித்தம்பி, "தேவார திருவாசகங்களில் சைவ சித்தாந்தக் கருத்துக்கள்" எனும் பொருளிலும் விரிவுரைகள் நிகழ்த்தினர். திரு. எஸ். தெய்வநாயகம் அவர்களின் நன்றியுரையுடன் முதல்நாள் நிகழ்ச்சிகள் நிறைவுபெற்றன.

இரண்டாம் நாள், தொலைக்கல்வி ஆலோசகர் திரு. ஆ. உலகராஜன், "அடியார்களின் வாழ்க்கை நெறியில் சைவசித்தாந்தத்தின் பங்கு" எனும் பொருளிலும், பிரதி அதிபர் செல்வி. பூ. புவனேஸ்வரி "சமயக் கல்வியை மாணவர்க்கு புகட்டுதற்கான பயிற்சி எனும் பொருளிலும் விரிவுரைகள் வழங்கினர்.

சைவப்புலவர் எஸ். சாமித்தம்பி, செல்வி. பி. புவனேஸ்வரி ஆகியோர் பண்ணுடன் பாடும் முறைபற்றி விளக்கமளித்து பயிற்சியும் அளித்தனர்.

திரு. எஸ். தெய்வநாயகம் அவர்களின் தொகுப்புரையுடனும், திரு. எஸ். மகேந்திரராஜா அவர்களின் நன்றியுரையுடனும் நிகழ்ச்சிகள் நிறைவுபெற்றன.



அம்பாறை மாவட்ட அறநெறிப்பாடசாலை ஆசிரியர்க்கான சைவசித்தாந்த வகுப்புக்களை உதவிப் பணிப்பாளர் திரு. எஸ். தெய்வநாயகம் அவர்கள் விளக்கேற்றி ஆரம்பித்துவைப்பதையும், கலாசார அலுவலர் திரு. எஸ். மகேந்திரராஜா உரைநிகழ்த்துவதையும், கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படத்திற் காணலாம்.

*மற்றவர்களின் அபிப்பிராயங்களுக்கும் மதிப்பளித்து இணங்கிப் போவதுதான் வெற்றியின் பரமரகசியம்.*

# கண்டி மாவட்ட அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு

கண்டி மாவட்ட அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கான ஒருநாட் கருத்தரங்கு மே மாதம் 9ம் திகதி நாவலப்பிட்டி தமிழ் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

உதவிப்பணிப்பாளர் திரு. வீ. விக்கிரமராஜா அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கிற்கு, கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனாநந்தா அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு ஆன்மீக அருளுரை, கூட்டுப்பிரார்த்தனை ஆகியவற்றை நடத்தினார். நாவலப்பிட்டி ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் திரு. ச. முத்தையாபிள்ளை சிறப்பு அதிதியாகக் கலந்துகொண்டார். ஆலயசபைச் செயலாளர் திரு. வே. பொன்னுத்துரை வரவேற்புரை நிகழ்த்தினார்.

கம்பளை கல்வித் திணைக்கள உதவிப்பணிப்பாளர் திரு. டி. பெரியசாமி, அட்டன் கல்வித் திணைக்கள உதவிப்பணிப்பாளர் திரு. கே. பி. மாயாவதாரம், கதிரேசன் கனிஷ்ட வித்தியாலய அதிபர் திரு. கே. சுப்பிரமணியம், இசையாசிரியை திருமதி. மா. ஜோதிலிங்கம் செல்வி. எஸ். முத்துசாமி ஆகியோர் விரிவுரைகள் நிகழ்த்தினர்.

இந்நிகழ்ச்சிக்கு கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த 60க்கு மேற்பட்ட அறநெறிப் பாடசாலைகளின் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியின் போது ஆசிரியர்களுக்கிடையிலான கலந்துரையாடல் இடம்பெற்றதோடு ஆசிரியர்களுக்கு, உசாத்துணை நூல்கள், சான்றிதழ்கள் என்பனவும் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சிகளுக்கான ஏற்பாடுகளை கலாசார அலுவலர் திருமதி. இராஜேஸ்வரி ஸ்ரீகாந்தா அவர்கள் மேற்கொண்டிருந்தார்.



இலக்கியச் சொற்பொழிவு நிகழ்ச்சியில் தினகரன் பிரதம ஆசிரியர் திரு. ராஜஸ்ரீகாந்தன் அவர்கள், உரை நிகழ்த்துவதையும், கூட்டத்தினரில் ஒரு பகுதியினரையும் படததிற காணலாம்.

வாழ்வு என்னும் போராட்டத்திற்கு மனிதன் தகுதி உள்ளவனாக வேண்டும் என்பதையே பகவத் கீதை போதிக்கிறது.

# இரத்தினபுரி மாவட்ட அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு

மேற்படி பயிற்சிக் கருத்தரங்கு ஏப்ரல் மாதம் 25ம் திகதி இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள பலாங்கொடை றை தமிழ் மகாவித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது. இப்பயிற்சியில் அறநெறிப்பாடசாலையைச் சேர்ந்த ஆசிரியர்களும், விரிவுரையாளர்களும், பிரதம விருந்தினர்களும், அரச உயரதிகாரிகளும், உத்தியோகத்தர்களும் மற்றும் உதவியாளர்களும் கலந்து கொண்டனர்.

ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ தியாகராஜ குருக்கள் வேதபாராயணம் ஓதி நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்தார். இதனைத் தொடர்ந்து பலாங்கொடை தமிழ் மகாவித்தியாலய அதிபரும், இளஞ் சைவப்புலவருமான திரு. என். ஜெயராஜ் அவர்கள் தொடக்கவுரையினை நிகழ்த்தி வைத்தார். மேலும் இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்கள பிரதிப்பணிப்பாளர் திருமதி. சாந்தி நாவுக்கரசன், வித்துவான் திருமதி. வசந்தா வைத்தியநாதன் அவர்கள் முறையே தேசிய, இந்துசமய (நந்தி) கொடிகளை ஏற்றி சிறப்பித்து வைத்தனர். அதனைத் தொடர்ந்து இந்துசமய, தேசியகீதங்கள், பஞ்சபுராணம் என்பன கலைமகள் அறநெறிப் பாடசாலை மாணவர்களால் பாடப்பட்டு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

கலாசார உத்தியோகத்தர் திருமதி. நிர்மலா கருணானந்தராஜாவின் வரவேற்புரை இடம்பெற்றது. தொடர்ந்து பிரதிப்பணிப்பாளர் திருமதி. சாந்தி நாவுக்கரசன் அவர்களின் தலைமையுரை இடம்பெற்றது. தொடர்ந்து அவரே இப்பயிற்சிக் கருத்தரங்கினை தலைமை தாங்கி நடத்தி வைத்தார்.

"ஆலயக்கிரியைகள்" எனும் தலைப்பில் வித்துவான் வசந்தா வைத்தியநாதன் அவர்களும், "எமது சமயத்தில் அடியார் கண்ட அன்பு நெறி" எனும் தலைப்பில் திரு. என். ஜெயராஜ் அவர்களும், "ஆன்ம ஈடேற்றத்திற்கு திருமுறைகள் எவ்வாறு வழிகாட்டுகின்றன" எனும் தலைப்பில் உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி. லலிதாம்பிகை சண்முகநாதன் அவர்களும், "சமய பாடங்கள் கற்பித்தல் முறை" எனும் தலைப்பில் மேல்மாகாண தமிழ் மொழிப் பாடசாலை இந்து ஆசிரிய ஆலோசகர் திருமதி. ஹேமா சண்முகசர்மா அவர்களும் விரிவுரைகளை நிகழ்த்தினர்.

உதவிப்பணிப்பாளர் திரு. வீ. விக்கிரமராஜா அவர்களின் தலைமையில் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து பிரதேசங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் இரத்தினபுரி, காவத்தை, இறக்குவானை, பலாங்கொடை போன்ற பகுதிகளிலிருந்து ஒவ்வொரு ஆசிரியர்களின் கருத்துரைகள் இடம்பெற்றன.

1995/1996 ஆம் ஆண்டில் இடம்பெற்ற இந்து சமயப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றிபெற்ற மாணவர்களுக்குரிய சான்றிதழ்கள், நூல்கள் வழங்கும் வைபவம் இடம்பெற்றது. தொடர்ந்து அறநெறிப் பாடசாலை ஆசியர்களுக்கு நூல்கள் வழங்கப்பட்டன.

நிறைவாக பஞ்சபுராணம் ஓதுதல், நன்றியுரை போன்ற நிகழ்ச்சிகளை சீ. சீ. தமிழ் வித்தியாலய அறநெறிப்பாடசாலை ஆசிரியர்கள் நடத்தி வைத்தனர். இத்துடன் கருத்தரங்கு இனிது முடிவு பெற்றது.

க. நிர்மலா
கலாசார உத்தியோகத்தர்

கடவுளிடம் நாம் எப்போதும்
"மன அமைதியைக்கொடு" என்று
வேண்டிக் கொள்வதே
நியாயமான பிரார்த்தனை.

## யாழ். மாவட்ட அருள்நெறி விழாவில்



கோப்பாய் அறநெறிப்பாடசாலை சகோதரிகள் வள்ளிதிருமணம் கதாப்பிரசங்கம் நிகழ்த்துகின்றனர்.



சிவபூரணி முத்தமிழ் மன்றத்தினரின் நாடகத்தில் ஒரு காட்சி



துர்க்கா மகளிர் இல்ல மாணவியர் வழங்கிய அபிநயப்பாடல்.




பக்தி உபந்நியாசம் நிகழ்ச்சியில், தஞ்சாவூர், நீடாமங்கலம், வி. அலமேலு, வி. சுப்பராமன், ஆகியோர் உரை நிகழ்த்துவதையும், நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்த ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனாநந்தா அவர்களுடன், கூட்டத்தினரில் ஒரு பகுதியினரையும் படத்திற் காணலாம்.

உங்களுக்கு எவ்வளவு ஆசைகள் இருக்கின்றனவோ அவ்வளவு துக்கங்களும் இருந்தே தீரும்.

– காஞ்சி முனிவர்

# "இந்துமத மறுமலர்ச்சியும் சுவாமி விவேகானந்தரும்"

திணைக்களம் ஏற்பாடு செய்யும் இந்துசமயப் பேருரைத் தொடரின் 90வது உரை ஏப்ரல் மாதம் 26ம் திகதி மாலை, வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் விரிவுரை மண்டபத்தில் நடைபெற்றது.

கொழும்பு மிஷன் தலைவர், ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனானந்தா அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு கன்னியா குமரி விவேகானந்தா ஆசிரமத்தைச் சேர்ந்த ஸ்ரீமத் சுவாமி சைதன்யானந்தா மஹராஜ் அவர்கள் "இந்துமத மறுமலர்ச்சியும், விவேகானந்தரும்" எனும் பொருளில் உரை நிகழ்த்தினார்.

இராமகிருஷ்ண இயக்கத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டுள்ள சுவாமி சைதன்யானந்தா ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு இந்துசமய வகுப்புக்களையும் பெண்களுக்கு திருவிளக்குப் பூஜை என்பவற்றையும் நடத்தி வருகின்றார்.

இந்நிகழ்ச்சிக்கு திணைக்களப் பணிப்பாளர் திரு. எஸ். தில்லை நடராஜா அவர்களும் கலந்து சிறப்பித்தார். உதவிப்பணிப்பாளர் திரு. குமார் வடிவேல் அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்ச்சி நிறைவுபெற்றது.

# கலாசார நிலையத்தின் நூலகம்

திணைக்களத்தின் கீழ் இயங்கும் மட்டக்களப்பு நாவற்குடா கலாசார நிலையத்தில் புதிதாக அமைக்கப்பட்ட நூலகத்தின் திறப்பு விழா, மே மாதம் 4ம் திகதி காலை நடைபெற்றது.

உதவிப்பணிப்பாளர் திரு. குமார் வடிவேல் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஜீவனானந்தா, மட்/மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ். சண்முகம் ஆகியோர் கலந்து கொண்டு நூலகத்தைத் திறந்து வைத்தனர். கலாசார உத்தியோகத்தர் செல்வி தங்கேஸ்வரி கதிராமனும் இந்நிகழ்ச்சியிற் கலந்து கொண்டார்.

# இரத்தினபுரி மாவட்ட அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கான பண்ணிசை பயிற்சி வகுப்பு

மேற்படி பண்ணிசை பயிற்சி வகுப்பு இரத்தினபுரி மாவட்டத்தில் அமைந்துள்ள பலாங்கொடை றை தமிழ் மகாவித்தியாலய மண்டபத்தில் 09.05.98 – 10.05.98 ஆம் திகதிகளில் நடைபெற்றது. இப்பயிற்சி வகுப்பில் அறநெறிப்பாடசாலை ஆசிரியர்கள், றை தமிழ் மகாவித்தியாலய அதிபர், விரிவுரையாளர், திணைக்கள உதவிப் பணிப்பாளர்கள், கலாசார உத்தியோகத்தர், பங்குகொண்டனர்.

மங்கள விளக்கேற்றலுடன், இந்துசமய, தேசிய கொடிகள் ஏற்றலுடன் நிகழச்சிகள் ஆரம்பமாகின. முதலில் பஞ்சபுராணம் ஓதல் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து ஆசிரியர்கள் அறிமுகம் இடம்பெற்றது. இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள கலாசார உத்தியோகத்தர் திருமதி. நிர்மலா கருணானந்தராஜா வரவேற்புரை நிகழ்த்தினார். றை தமிழ் மகாவித்தியாலய அதிபர் திரு. என். ஜெயராஜ் அவர்கள் தலைமைதாங்கி நிகழ்ச்சிகளை நடத்தினார்.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப்பணிப்பாளர் திரு. வீ. விக்கிரமராஜா அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்பித்தார். சங்கீதரத்தினம் திரு. மு. வர்ணகுலசிங்கம் அவர்கள் முதலாம் திருமுறை தொடக்கம் 7ம் திருமுறை வரையிலும் செயல்பயிற்சியினை வழங்கினார். கல்வித் திணைக்கள உதவிப்பணிப்பாளர் திருமதி. லலிதாம்பிகை சண்முகநாதனின் 8ஆம் திருமுறை திருவாசகத்தில் செயல்முறை பயிற்சியும், வித்துவான் வசந்தா வைத்தியநாதன் அவர்களது விளக்க விரிவுரையும் இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து ஆசிரியர்கள் குழுக்களாக பாடும் பயிற்சியும் வழங்கப்பட்டது.

இரண்டாம் நாளான 10.05.98 ஆம் திகதி சங்கீதரத்தினம் வர்ணகுலசிங்கம் அவர்களின் புராணம், திருப்புகழ், தோத்திரப்பாடல்கள், சகலகலாவல்லிமாலை, அபிராமி அந்தாதி, தாயுமானவர் போன்ற பாடல்களின் செயல்முறைப் பயிற்சியும் கல்வி உதவிப்பணிப்பாளர் திருமதி. லலிதாம்பிகை சண்முகநாதனின் தோத்திரப்பாடல் பயிற்சியும் வழங்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து வித்துவான் வசந்தா வைத்தியநாதன் அவர்களின் விளக்க விரிவுரையும் இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து ஆசிரியர்களுக்கு மீள் பயிற்சியும், குழுக்களாக பாடும் பயிற்சியும் வழங்கப்பட்டன.

இறுதியாக இரத்தினபுரி, காவத்தை, இறக்குவானை, பலாங்கொடை பிரதேச அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களது கருத்துரைகள் இடம்பெற்றன.

அத்துடன் பங்குகொண்ட ஆசிரியர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. நன்றியுரை, பஞ்சபுராணம் ஓதலுடன் இருநாள் நிகழ்ச்சிகள் இனிது முடிவு பெற்றன.

தொகுப்பு - க. நிர்மலா
கலாசார உத்தியோகத்தர்

## இந்துசமயத்தில் தேவாரங்கள்

திணைக்களம் நடாத்தும் இந்துசமயப் பேருரைத் தொடரின் 89வது உரை மார்ச் மாதம் 22 ம் திகதி மாலை 5 மணிக்கு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் விரிவுரை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறையின் வருகை விரிவுரையாளர் கலாநிதி திருமதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள் "இந்துசமயத்தில் தேவாரங்கள்" எனும் பொருளில் உரை நிகழ்த்தினார்.

வித்துவான் க.ந. வேலன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சி, உதவிப்பணிப்பாளர் திரு. குமார் வடிவேல் அவர்களின் நன்றியுரையுடன் நிறைவு பெற்றது.

# வவுனியா மாவட்ட அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு

இந்து சமய கலாசார திணைக்களத்தின் ஏற்பாட்டில் வவுனியா மாவட்ட அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான ஒருநாட் பயிற்சிக் கருத்தரங்கு ஆனி மாதம் 9 ஆம் திகதி வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கக் கட்டடத்தில் வவுனியா கலாசார உத்தியோகத்தர் அவர்களால் நடாத்தப்பட்டது.

வவுனியா பிரதேச செயலாளர் திருமதி மேரி ஆன் இமெல்டா அவர்களது தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கு, சிந்தாமணிப் பிள்ளையார் ஆலய அறநெறிப்பாடசாலை ஆசிரியர் திருமதி. சு. தம்பித்துரை அவர்களது பஞ்சபுராண ஓதலுடன் ஆரம்பமானது. சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத் தலைவர் திரு. நா. சேனாதிராஜா அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்.

வவுனியா அரசாங்க அதிபர் திரு. கே. கணேஸ் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தினார். "சைவசித்தாந்தம் கூறும் முப்பொருள் உண்மை" என்ற தலைப்பில் சைவப்புலவர் திரு. பொன் தெய்வேந்திரம் அவர்களும், "ஆலய வழிபாடுகள்" என்ற தலைப்பில் திருமதி. பு. ஐயம்பிள்ளை அவர்களும், "இதிகாசம் கூறும் நல்லறம்" என்ற தலைப்பில் திரு. நா. தர்மராஜா (அகளங்கன்) அவர்களும், "தேவாரங்களும் புராணங்களும்" என்ற பொருளில் தமிழருவி த. சிவகுமாரன் அவர்களும் விரிவுரை நிகழ்த்தினர்.

இறுதியில் அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கும், விரிவுரையாளர்களுக்கும் இடையில் கலந்துரையாடல் இடம்பெற்றது. தொடர்ந்து குருமண்காடு ஸ்ரீசித்தி விநாயகர் அறநெறிப்பாடசாலைப் பொறுப்பாசிரியர் திரு. ந. விஜயரட்ணம் அவர்களது நன்றியுரையுடனும், ஓமந்தை நாவலர் அறநெறிப்பாடசாலை ஆசிரியர் திரு. ஆ. கோடீஸ்வரன் அவர்களது பஞ்சபுராண ஓதலுடனும் நிகழ்வு நிறைவுபெற்றது.

திருமதி. எஸ் டீ. ஜே. தெய்வேந்திரன்
(கலாசார அலுவலர்)

# திருமுறைப் பெருவிழா

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினரின் திருமுறைப் பெருவிழா 1998.06.09 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தில் மன்றத்தலைவர், பண்டிதர் திரு. வ. பேரின்பநாயகம் அவர்களின் தலைமையின் கீழ் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

அன்றைய தினம் காலை 7.00 மணிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்திலிருந்து திருமுறைச் சுவடிகள், திருமுறைப் பாராயணம், மங்கலவாத்தியம் சகிதம் வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்திற்கு ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டது. பன்னிரு திருமுறைகளும் சோடச உபசார பூசை செய்யப்பட்டு விழா ஆரம்பமாகியது. அன்றைய தினம் வெளியீடு செய்யப்பட்ட "அகத்தியர் தேவாரத்திரட்டு" நூலின் முற்றோதலும் இடம்பெற்றது. நல்லை குருமஹா சந்நிதானம், வண்ணை வைத்தீஸவரன் தேவஸ்தான பிரதம குரு பிரம்மஸ்ரீ பிராணதார்த்திஹர குருக்கள் ஆகியோர் ஆசியுரை வழங்கினர். விழாவில் பங்கு கொண்டோர்க்கு அகத்தியர் தேவாரத் திரட்டின் பிரதிகள் வழங்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து திருமுறைச் சொற்பொழிவுகளும் தெய்வத் தமிழிசைவாணர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

மாலை நிகழ்வாக மகேஸ்வர பூசையைத் தொடர்ந்து திருநெறியதமிழ் இசை உரை அரங்கு ஆரம்பமாகியது. ஸ்ரீ செந்தில் கதிர் வேலாயுத சுவாமி கோவிலில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு உரை விளக்கத்தினை பண்டிதமணி மு. கந்தையா அவர்களும், இசை விளக்கத்தினை சாகித்ய இசையரசு நா. வி. மு. நவரத்தினம் அவர்களும் வழங்கினர்.

"நால்வர் பொற்றாள் எம்முயிர்த் துணையே" எனக் கொண்டு நன்றியுரையுடனும், திருமுறை ஓதலுடனும் விழா இனிது நிறைவுபெற்றது.

தகவல் :- திருமதி. மைதிலி விசாகரூபன்
கலாசார அலுவலர்,
பிரதேச செயலகம், நல்லூர்.

# மட்டக்களப்பு மாவட்ட அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கான இருநாள் சைவ சித்தாந்த வகுப்பு

மட்டக்களப்பு மாவட்ட அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான சைவ சித்தாந்த வகுப்பு, மட்டக்களப்பு நாவற்குடா இந்து கலாசார நிலையத்தில் மே மாதம் 2ம், 3ம் திகதிகளில், தினம் காலை 9.00 முதல் பி. ப. 4.30 வரை நடைபெற்றது. இதற்கான ஏற்பாடுகளை மட்டக்களப்பு மாவட்ட கலாசார உத்தியோகத்தர் செல்வி. க. தங்கேஸ்வரி செய்திருந்தார்.

உதவிப்பணிப்பாளர் திரு. குமார் வடிவேல் தலைமையில் நடைபெற்ற ஆரம்ப வைபவத்தில், சுவாமி ஜீவனானந்தாஜி மஹராஜ் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கினார். மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. சி. சண்முகம், மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு. பொ. செல்வராசா ஆகியோரும் உரையாற்றினர்.

ஆரம்ப வைபவத்தைத் தொடர்ந்து வகுப்புக்கான விரிவுரைகள் இடம் பெற்றன.

சைவசித்தாந்த இலக்கியங்கள் எனும் பொருளில் - இரா. நாகலிங்கம்

சைவசித்தாந்தத் தெளிவு எனும் பொருளில் - திருமதி சுபா சக்கரவர்த்தி

சைவசித்தாந்தமும் வேதாந்தமும் எனும் பொருளில்- திருமதி சாந்தி கேசவன்
(சேவைக்காலப் பயிற்சி ஆலோசகர், இந்துசமயம்)

சைவசித்தாந்தமும் விஞ்ஞானமும் எனும் பொருளில் - திருமதி சுபா சக்கரவர்த்தி

சைவசித்தாந்தம் கூறும் மனித விழுமியங்கள் எனும் பொருளில் - திருமதி சாந்தி கேசவன்

சைவசித்தாந்தத்தின் மூலம் ஆன்ம ஈடேற்றம் எனும் பொருளில்
சைவப்புலவர் - த. சாந்தலிங்கம்
(அதிபர், மட். கலைவாணி மகா வித்தியாலயம்)

ஆகியோர் விரிவுரைகள் நிகழ்த்தினர்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அறநெறிப்பாடசாலை ஆசிரியர்கள் 60 பேர் இவ்வகுப்பில் பங்குபற்றினர். பயிலுனர்களை இவ்வகுப்பு விரிவுரைகளில் முழுமையாக ஈடுபடச் செய்வதற்காகப் பின்வரும் இரு நடைமுறைகள் கையாளப்பட்டன.

(1) விரிவுரை நடக்கும் போது பயிலுநர் குறிப்புகளை எழுதுதல்

(2) விரிவுரை முடிவில் அவ்வுரை தொடர்பான பத்துக் கேள்விகளுக்குப் பயிலுனர் சுருக்கமான விடை எழுதுதல்.

மேற்படி உரைக்குறிப்புகளையும், பரீட்சை விடைகளையும் சம்பந்தப்பட்ட உரைஞர்கள் மதிப்பீடு செய்து வழங்கினர். இவை பயிலுநர் மத்தியில் கலந்துரையாடப்பட்டன. மிகச் சிறந்த 10 உரைக் குறிப்புகளும் மிகச் சிறந்த 10 விடைத்தாள்களும் தெரிவு செய்யப்பட்டு அவற்றை எழுதிய பயிலுனர்கள் பாராட்டப்பட்டனர்.

இச்சித்தாந்த வகுப்புக்களின் பெறுபேறுகளைப் பின்வரும் தொகுத்துக் கூறலாம்.

(1) சைவசித்தாந்தம் பற்றிய தெளிவை ஏற்படுத்தியமை.

(2) சைவசித்தாந்தக் கோட்பாடுகளுக்கும், வேதாந்தக் கோட்பாடுகளுக்கும் உள்ள ஒற்றுமையை விளக்கியமை.

(3) நடைமுறை வாழ்க்கையில் சைவசித்தாந்தக் கோட்பாடுகளைக் கடைப்பிடிப்பதற்கான வழி வகைகளை எடுத்துக் காட்டியமை.

இத்தகைய அணுகுமுறையில் பயிலுநர்கள் பெரும் ஈடுபாடு காட்டினர். பயிற்சி முடிவில் பயிலுநர்களுக்கான சான்றிதழ்களை சுவாமி ஜீவனானந்தாஜி மஹராஜ் வழங்கினார். மாவட்ட கலாசார உத்தியோகத்தர் செல்வி. க. தங்கேஸ்வரி நன்றியுரை கூறினார். இறை வணக்கத்துடன் ஆரம்பித்த இருநாள் வகுப்புக்கள் இறை வணக்கத்துடன் நிறைவு பெற்றன.

தொகுப்பு / செல்வி. க. தங்கேஸ்வரி
கலாசார உத்தியோகத்தர்.

# யாழ்ப்பாணத்தில் அருள்நெறி விழா

திணைக்களம் ஏற்பாடு செய்திருந்த யாழ்ப்பாண மாவட்ட அருள்நெறி விழா மே மாதம் 10ம் திகதி, யாழ்ப்பாணம் துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெற்றது.

பிரதிப்பணிப்பாளர் திருமதி. சாந்தி நாவுக்கரசன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியை, யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திரு. து. வைத்திலிங்கம், துர்க்கா துரந்தரி செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர்.

சாவகச்சேரி பழனியாண்டவர் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பாடலைத் தொடர்ந்து, மானிப்பாய் இந்துசமய அபிவிருத்திச் சங்க அறநெறிப் பாடசாலை மாணவர்கள் பஞ்சபுராணம் ஓதினர்.

அடுத்து மேலதிக அரச அதிபர் திரு. து. வைத்தியலிங்கம் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். தொடர்ந்து அரியாலை ஸ்ரீ ஞானவைரவர் ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கூட்டுப்பிரார்த்தனை, மீசாலை மேற்கு இந்து இளைஞர் மன்ற அறநெறிப்பாடசாலை மாணவர்களின் நற்சிந்தனை, தனிநடனம் என்பன இடம் பெற்றன.

ஆன்மீக உடைக்காட்சி நிகழ்ச்சியில் பல்வேறு தெய்வ வடிவங்களில் மாணவர் காட்சியளித்தனர். – தொடர்ந்து "மானிலம் பயனுற வாழ்வதற்கே" எனும் பொருளில் மாணவர்கள் கலந்து கொண்டு கவிதைகள் இசைத்தனர். அடுத்ததாக, யாழ். மாவட்ட சாயி பஜனைக்குழுக்கள் இணைந்து பஜனை நிகழ்ச்சியை நடத்தின.

ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் திரு. ஆ. சிவநாதன் ஆன்மீக அருளுரை நிகழ்த்தினார். தொடர்ந்து கோப்பாய் சத்திய சாயி ஆச்சிரம மாணவர்களின் "சத்தியமே காயத்திரி" எனும் நாட்டிய நாடகம் இடம்பெற்றது. கோப்பாய் நாவலர் பாடசாலை மாணவர்கள் "வள்ளி திருமணம்" எனும் கதாப்பிரசங்கத்தை நிகழ்த்தினர்.

தொடர்ந்து திருமதி. சாந்தி நாவுக்கரசன் தலைமையேற்று புதிர்ப்போட்டியினை நடத்தினார். போட்டியை ஆசிரியர் ஆறு. திருமுருகன் அவர்கள் நெறிப்படுத்தினார். துணுக்காய், அரியாலை ஸ்ரீ ஞான வைரவர், கைதடி நுணாவில், சிவபூரணி முத்தமிழ் மன்றம், நாவற்குழியூர், மானிப்பாய் சைவசமய அபிவிருத்திக் கழகம், மீசாலை இந்து இளைஞர் மன்றம் ஆகிய அறநெறிப்பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் இப்போட்டிகளிற் பங்கு கொண்டனர்.

தொடர்ந்து துர்க்கா துரந்தரி செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் ஆன்மீக அருளுரை நிகழ்த்தினார். தொடர்ந்து யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர் அவர்களின் ஆன்மீகக் கருத்துரை இடம்பெற்றது.

அடுத்ததாக சாவகச்சேரி பழனியாண்டவர் ஆலய அறநெறிப்பாடசாலை மாணவர்களின் அறநெறித்தீபம், "அகந்தை அழிந்தது" எனும் நாடகம் என்பன இடம்பெற்றன. சிவபூரணி முத்தமிழ் மன்ற மாணவர்கள் "நம்பிக்கை அற்புதங்களைச் செய்யும்" எனும் நாடகத்தை அளித்தனர்.

தொடர்ந்து தெல்லிப்பளை துர்க்கா மகளிர் இல்ல மாணவியரின் குழுப்பாடல், "மார்க்கண்டேயன்" நாடகம் என்பன இடம் பெற்றன.

அடுத்ததாக, இந்துசமயப் பேரவைத்தலைவர் அருட்கவி சீ. விநாசித்தம்பி அவர்கள் "இன்னருள் தந்தாய்" எனும் பொருளில் அருளுரை வழங்கினார்.

விழாவின் போது நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள் கலந்து சிறப்பித்ததோடு அருளுரையும் வழங்கினார்.

நிகழ்ச்சியின் நிறைவாக திணைக்களம் 95/96ம் ஆண்டுகளில் நடத்திய கட்டுரைப் பேச்சுப் போட்டிகளிற் பரிசுபெற்ற யாழ். மாவட்ட மாணவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் இடம்பெற்றது. கோப்பாய் பிரதேச செயலக கலாசார அலுவலர் செல்வி மாலினி இராமலிங்கம் அவர்களின் நன்றியுரையுடன் விழா நிறைவுபெற்றது.

திணைக்களத்தின் அநுசரணையோடு நடைபெற்ற இவ்விழாவிற்கு, யாழ். மாவட்ட செயலகம், பிரதேச சபைகள் என்பன இணைந்து அளித்த ஒத்துழைப்பு குறிப்பிடத்தக்கது.

# யாழ். மாவட்ட அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு


திணைக்களம் ஏற்பாடு செய்து நடத்திய யாழ்ப்பாண மாவட்ட அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கான ஒரு நாட் கருத்தரங்கு மே மாதம் 12ம் திகதி யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதிப்பணிப்பாளர் திருமதி. சாந்தி நாவுக்கரசன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கிற்கு யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திரு. து. வைத்திலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

"குடும்பப் பாரம்பரியம்" எனும் தலைப்பில் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர் அவர்களும் "சம்பந்தர் தேவாரங்களின் சிறப்பியல்புகள்" எனும் தலைப்பில் திரு. ந. வி. மு. நவரட்ணம் அவர்களும், "சமய வாழ்வில் கிரியைகள்" எனும் பொருளில் திருமதி. நா. செல்வநாயகம் அவர்களும், விரிவுரைகள் நிகழ்த்தினர்.

அத்துடன் விரிவுரையாளர்களால், கற்பித்தல் தொடர்பான செயலமர்வு நிகழ்ச்சியும் நடைபெற்றது. நல்லூர் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தரின் நன்றியுரையுடன் நிகழ்ச்சி நிறைவு பெற்றது.

---



# இந்துசமயத் திணைக்களத்தில் நூல் விற்பனை

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் மூலம் 96, 97ம் ஆண்டுகளில் அச்சிட்டு வெளியிடப்பட்ட "தமிழ் அரங்கியல் மரபும் மாற்றங்களும்", "மட்டக்களப்பு மாவட்டச் சைவக் கோயில்கள்" (மறுபதிப்பு), "திருகோணமலை மாவட்டத் திருத்தலங்கள்" (மறுபதிப்பு), "கதிரைமலைப்பள்ளு" (மறுபதிப்பு), "ஆறுமுகநாவலர் பிரபந்தத்திரட்டு" (மறுபதிப்பு), "திருக்கோணாசல புராணம்" ஆகிய நூல்கள் தற்போது விற்பனைக்கு உள்ளன. வார நாட்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணிவரை இவற்றை திணைக்களத்திற் கொள்வனவு செய்யலாம்.

இதேவேளை தமிழியல், இலக்கியம், நாவல், சிறுகதை, கவிதை, ஆய்வு என்பன உள்ளிட்ட பல்வேறு துறை சார்ந்த நூல்கள் திணைக்கள விற்பனை நிலையத்தில் விற்பனைக்குள்ளமை குறிப்பிடத்தக்கது.

தீயைச் சேர்ந்த விறகுக்கட்டை தானே தீ மயமாகி விடுகின்றது. கடவுளைச் சரணடையும் ஒருவன் தானே கடவுள் தன்மை பெற்று விடுகிறான்.



யாழ் மாவட்ட அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கான கருத்தரங்கில், யாழ் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி. நாச்சியார் செல்வநாயகம் அவர்கள் உரை நிகழ்த்துவதையும், மேடையில், யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர், திரு. து. வைத்திலிங்கம், பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணன், யாழ். பல்கலைக்கழக நுண்கலைப் பீடத்தலைவர் திரு. வி. ந. மு. நவரத்தினம், ஆகியோர் அமர்ந்திருப்பதையும், கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படத்திற் காணலாம்.



யாழ். மாவட்ட அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்காக நடைபெற்ற சைவசித்தாந்த வகுப்புக்களில் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணன், பேராசிரியர் ந. சுப்பிரமணியம் ஆகியோர் உரை நிகழ்த்துவதையும், யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திரு. து. வைத்திலிங்கம், சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி. கலைவாணி இராமநாதன், திருமதி. சாந்தி நாவுக்கரசன், ஆகியோரையும் கூட்டத்தினரின் ஒரு பகுதியினரையும் படத்திற் காணலாம்.

எண்ணம் நல்லதாக இருந்தால்,
அநுபவமும் நல்லதாகவே இருக்கும்.

# பக்தி உபந்நியாசம்

திணைக்களத்தின் ஏற்பாட்டில் பக்தி உபந்நியாசம் நிகழ்ச்சி ஒன்று மே மாதம் 16ம் திகதி மாலை, வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் விரிவுரை மண்டபத்தில் நடைபெற்றது.

மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனாநந்தாஜி மஹராஜ் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்ச்சியில் தமிழ்நாடு, தஞ்சை மாவட்டம் நீடா மங்கலம், வி. அலமேலு, திரு. வி. சுப்பராமன் ஆகியோர் "பிரணவோபதேசம்" எனும் பொருளில் பக்தி உபந்நியாசம் நிகழ்த்தினர். வி. அலமேலு அவர்கள் 'கோகிலவாணி' 'கிருஷ்ணகான திலகமகள்', 'பாலமீரா' போன்ற சிறப்புப் பட்டங்களைப் பெற்றவர். திரு. சுப்பராமன் 'சொல்லின் செல்வர்' எனும் பட்டம் பெற்றவர்.

உதவிப் பணிப்பாளர் திரு. குமார் வடிவேல் அவர்களின் நன்றியுரைடன் நிகழ்ச்சி நிறைவுபெற்றது.

# கண்டியில் இந்துசமயப் பேருரை

திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் வெளி மாவட்டங்களுக்கான இந்துசமயப் பேருரைத் தொடரின் 6வது உரை மே மாதம் 17ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை கண்டி பெண்கள் உயர்தரப் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

உதவிப்பணிப்பாளர் திரு. குமார் வடிவேல் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், பெண்கள் உயர்தரப் பாடசாலை உதவி அதிபர் திருமதி. நவம் வெள்ளைச்சாமி வரவேற்புரை நிகழ்த்தினார்.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் கல்விப் பணிப்பாளர் திரு. கு. சோமசுந்தரம் அவர்கள், "இளையோரை சமூகமயமாக்கலில் சமயத்தின் பங்கு" எனும் பொருளில் பேருரை நிகழ்த்தினார்.

---

சமய சாதனையின் நுட்ப இரகசியமெல்லாம் கொள்கைகளில் இல்லை. அதை அநுட்டிப்பதில்தான் அடங்கியிருக்கிறது.

# கொழும்பு, காலி, கம்பஹா மாவட்ட அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு - 1998

மேற்படி பயிற்சிக் கருத்தரங்கு மே மாதம் 23 ஆம் திகதி கொழும்பு - 13 ல் உள்ள ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலய ஐங்கரன் மண்டபத்தில் மங்கள விளக்கேற்றலுடனும் ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலய அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களின் பஞ்சபுராண ஓதுதல் நிகழ்ச்சியுடனும் ஆரம்பமாகியது.

இந்நிகழ்ச்சிக்கு பிரதம விருந்தினராக கொட்டாஞ்சேனை ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலய தர்மகர்த்தாவான திரு. பி. பாலசுந்தரம் அவர்கள் கலந்து சிறப்பித்து உரையாற்றினார். இதனைத் தொடர்ந்து இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்கள கலாசார உத்தியோகத்தர் திருமதி. நிர்மலா கருணானந்தராஜா வரவேற்புரை நிகழ்த்தினார். திணைக்களப் பிரதிப்பணிப்பாளர் திருமதி. சாந்தி நாவுக்கரசன் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கி நடத்தி வைத்தார்.

கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி ஆத்மகனானந்தாஜி அவர்களின் ஆசியுரையைத் தொடர்ந்து திரு. பி. பாலசுந்தரம் அவர்களது சிறப்புரை இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து "தியானமும் வாழ்க்கையும்" என்னும் தலைப்பில் சுவாமி ரமணன் சைத்தன்யா அவர்களும், "சமூக விழுமியங்கள்" என்னும் தலைப்பில் முன்னாள் கல்விப் பிரதிப்பணிப்பாளர் நாயகம் திரு. வெற்றிவேல் சபாநாயகம் அவர்களும் "சமயக் குரவர் நால்வர் வாழ்வும் வாக்கும்" என்னும் தலைப்பில் சைவப்புலவர் திரு. சு. செல்லத்துரை அவர்களும் "அட்டாங்க யோகமும் அனுஷ்டானமும்" என்னும் தலைப்பில் வித்துவான் திருமதி. வசந்தா வைத்தியநாதன் அவர்களும் "ஆசிரியர் வழிகாட்டி நூலாகப் பாடத்திட்டத்தை எவ்வாறு கற்பித்தல்" என்னும் தலைப்பில் மேல் மாகாண தமிழ் மொழிப் பாடசாலை இந்து சமய ஆசிரிய ஆலோசகர் திருமதி. ஹேமா சண்முகசர்மா அவர்களும் விரிவுரை நிகழ்த்தினர்.

அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கான செயலமர்வினை சுவாமி ரமணன் சைத்தன்யா அவர்கள் குழுக்களாகப் பிரித்துப் பின்வரும் தலைப்பில் தலைமைதாங்கி நடத்தினார்.

*நீங்கள் மாணவர்களை சந்திக்கும் பொழுது ஏற்படும் பிரச்சினைகள் என்ன ?*

*அதற்கு வழங்கும் தீர்வு*

*அன்றாட பாடத்திட்டத்தில் ஏற்படும் பிரச்சினைகள்*

அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்குரிய நூல்களும் ஆசிரியர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இறுதியாக ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலய அறநெறிப்பாடசாலை ஆசிரியரின் நன்றியுரையுடனும் கொழும்பு இராமகிருஷ்ணமிஷன் அறநெறிப்பாடசாலை ஆசிரியரின் பஞ்சபுராண ஓதலுடனும் நிகழ்ச்சிகள் யாவும் இனிது நிறைவு பெற்றன.

தொகுப்பு - க. நிர்மலா
கலாசார உத்தியோகத்தர்

# மாத்தளையில் இந்துசமயப் பேருரை

திணைக்களம் நடாத்தும் வெளி மாவட்டங்களுக்கான இந்துசமயப் பேருரைத் தொடரின் 7வது உரை மே மாதம் 29ம் திகதி பிற்பகல் மாத்தளை இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

கல்லூரி அதிபர் திரு. வீ. பாலகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், அருள்மொழியரசி, வித்துவான் திருமதி. வசந்தா வைத்தியநாதன் அவர்கள் "ஆலய வழிபாடும், அறிவியலும்" எனும் பொருளில் உரை நிகழ்த்தினார்.

உதவிப்பணிப்பாளர் திரு. குமார் வடிவேல் இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். கலாசார அலுவலர் திரு. பெ. வடிவேலன் அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்ச்சி நிறைவுபெற்றது.

அன்றைய தினம், திணைக்களம் 1996ம் ஆண்டு நடத்திய இந்துசமயப் போட்டிகளிற் பரிசுபெற்ற மாத்தளை மாவட்ட மாணவர்களுக்கான பரிசளிப்பு, சான்றிதழ் வழங்கல் வைபவமும் இடம்பெற்றது.

# மதமும் கவிதையும் – தமிழ் அநுபவம்

திணைக்களம் நடத்தும் இந்துமதப் பேருரைத் தொடரின் 92 வது உரை மே மாதம் 30 ம் திகதி சனிக்கிழமை மாலை கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

சங்கத் தலைவர் கலாசூரி ஆர். சிவகுருநாதன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் கிழக்குப் பல்கலைக்கழக வருகைப் பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் "மதமும் கவிதையும் – தமிழ் அநுபவம்" எனும் பொருளில் உரை நிகழ்த்தினார்.

உதவிப்பணிப்பாளர் திரு. குமார் வடிவேல் அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்ச்சி நிறைவுபெற்றது.

*பகை, பொறாமை ஆகியவற்றை நீ வெளியிட்டால் அவை, வட்டியும் முதலுமாக மீண்டும் உன்னிடமே திரும்பி வந்து சேர்ந்துவிடும்.*

# பண்பாடு - பருவ இதழ்

திணைக்களத்தின் பருவ இதழான பண்பாடு, 19 வது இதழ் வெளியிடப்பட்டுள்ளது. இவ்விதழில், "பத்தொன்பதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் வளர்ச்சி" (பேராசிரியர் பொ. பூலோகசிங்கம்), ஆனந்தரங்கப் பிள்ளை – தமிழர்களின் தலைவர் (பேராசிரியர் அ. பாண்டுரங்கன்) திருமுறைகாட்டும் கோமானும் யப்பானியக் கமியும் (திருமதி. மனோன்மணி சண்முகதாஸ்) இலங்கையில் சிறுவர் இலக்கிய வளர்ச்சி – ஒரு கண்ணோட்டம் (செ. யோகராஜா எம். ஏ.) மட்டக்களப்புப் பிரதேச தமிழ்நாவல்கள் (திருமதி. றூபி வலன்ரினா பிரான்சிஸ்) சமஸ்கிருதத் காவியக் கலை (திருமதி. ஏ. என். கிருஸ்ணவேணி," "ந. ரவீந்திரனின் பாரதியின் மெய்ஞ்ஞானம்" (அன்புமணி) ஆகிய கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

---

# இலக்கியச் சொற்பொழிவு

திணைக்களம் ஏற்பாடு செய்யும் இலக்கியப் பேருரைத் தொடரின் 13 வது உரை யூன் மாதம் 6 ம் திகதி வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெற்றது.

கொழும்பு தமிழ்ச்சங்கத் தலைவர் கலாசூரி ஆர். சிவகுருநாதன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் தினகரன் பிரதம ஆசிரியர் திரு. ராஜ ஸ்ரீ காந்தன் அவர்கள் "தமிழ் இலக்கிய வளர்ச்சியில் ஈழத்தவர் பங்கு" எனும் பொருளில் உரை நிகழ்த்தினார். உதவிப்பணிப்பாளர் திரு. குமார் வடிவேல் அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்ச்சி நிறைவுபெற்றது.

---

# சிங்கள தமிழ் நாவல், சிறுகதை மொழிபெயர்ப்பு

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் இலங்கையின் சிறந்த சிங்கள, தமிழ் நாவல்களையும் சிறுகதைகளையும் மொழிபெயர்த்து நூல் வெளியிடும் திட்டமொன்றினை வகுத்துள்ளது.

இதன் முதற்கட்டமாக, இலங்கையின் சுதந்திரதினப் பொன்விழாவையொட்டி வெளியிடப்பட்ட தமிழ்ச் சிறுகதைகள் தொகுதி சிங்கள மொழியிலும், சிங்களச் சிறுகதைத் தொகுதி தமிழ் மொழியிலும் மொழிபெயர்க்கப்படவுள்ளன.

மொழிபெயர்ப்பு நிறைவு பெற்றதும் நூல்களை அச்சிடுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும்.

# மட்டக்களப்பு சுவாமி விபுலானந்த இசைநடனக் கல்லூரி நான்காண்டு கற்கைநெறி (டிப்ளோமா) பரீட்சைப் பெறுபேறுகள் - 1997

மட்டக்களப்பு சுவாமி விபுலானந்த இசை, நடனக் கல்லூரியில் நான்கு வருட இசை/ நடனத் துறைகளில் டிப்ளோமா கற்கை நெறியினை முடித்து 1998 ம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் பெறுபேறுகள் வருமாறு :

## இரண்டாம் வகுப்பு : உயர் பிரிவு

| | | |
|---|---|---|
| செல்வி. தனலெட்சுமி சண்முகம் | வாய்ப்பாட்டு | (சிலாபம்) |

## இரண்டாம் வகுப்பு : கீழ்ப்பிரிவு

| | | |
|---|---|---|
| செல்வி. குமுதினி பீதாம்பரம் | வாய்ப்பாட்டு | (அம்பாறை) |
| செல்வி. வசந்தி முருகேசு | வாய்ப்பாட்டு | (திருகோணமலை) |
| செல்வி. மங்கையற்கரசி நடேசன் | வாய்ப்பாட்டு | (பதுளை) |
| செல்வன். தெட்சணாமூர்த்தி பிரதீபன் | வாய்ப்பாட்டு | (மட்டக்களப்பு) |
| செல்வி. பூங்கோதை தங்கமயில் | வயலின் | (யாழ்ப்பாணம்) |
| செல்வி. கலைவாணி பீதாம்பரம் | வாய்ப்பாட்டு | (அம்பாறை) |

## சாதாரண பிரிவு

| | | |
|---|---|---|
| செல்வி. லக்ஷ்மிகலா பாலகிருஷ்ணன் | வாய்ப்பாட்டு | (மட்டக்களப்பு) |
| செல்வி. பங்கேஸ்வரி மயில்வாகனம் | வாய்ப்பாட்டு | (மட்டக்களப்பு) |
| செல்வன். கனகராஜா தயாளன் | மிருதங்கம் | (மட்டக்களப்பு) |
| செல்வி. பரமேஸ்வரி பிள்ளையான் | வாய்ப்பாட்டு | (மட்டக்களப்பு) |
| செல்வன். புண்ணியமூர்த்தி கருணாகரன் | வாய்ப்பாட்டு | (திருகோணமலை) |
| செல்வி. சக்தீஸ்வரி சக்திதாசன் | பரதம் | (மட்டக்களப்பு) |

மேற்படி பரீட்சைக்குத் தோற்றிய 20 பேரில் 13 பேர் சித்தியடைந்துள்ளனர். ஏனையோர் சித்தியடையத் தவறியுள்ளனர்.

பரீட்சையில் சித்தியடையத் தவறிய மாணவர்களுக்கு 1998 ஆகஸ்ட் மாத நடுப்பகுதியில் மீள் பரீட்சையொன்று நடத்தப்படும். எதிர்வரும் யூலை மாதத்தில் இவர்களுக்கென சிறப்பு பயிற்சி நெறியொன்றினை இரண்டு வாரங்களுக்கு கொழும்பில் நடத்துவதற்கான ஒழுங்குகளை திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

# உய்யும் வழியினைப் பேண்மின் !

இந்த நிலவுலகத்தில் தோன்றிய உயிர்களுக்கெல்லாம் உடல், கருவிகள் மற்றும் உலகப் பொருள்கள், பிற நுகர்பொருள்கள் யாவற்றையும் தந்து பாதுகாக்கிறான் இறைவன். அநாதிகாலமாக அவனுடைய அருளாணை இயங்கி வருகிறது. உலகத்தை ஆக்கி, அளித்து, அழித்து, மறைத்து, அருளும் ஐந்தொழில்களையும் இடைவிடாது இயற்றிவரும் இறைவன், உயிர்களின் பக்குவத் தன்மைக்கேற்ப சிறப்பான முறையில் தோற்றுகிறான். உருவமும், பெயரும் கொண்டு அருள் பாலிக்கிறான். உயிர்களின் பக்குவத் தன்மை உயர்ச்சியடைந்து தன்னை அடையும் வரை அப்பெருமானுடைய அருள்வேகம் காத்திருப்பதில்லை. அவனே இவ்வாருயிரை ஆட்கொள்ள இறங்கி வருகிறான்.

இறைவனின் இப்பெரும் கருணைச் செயலினால் பக்குவப்பட்ட ஆன்மாக்கள் இறைவனை உருவுநிலையிலேயே கண்டு போற்றி வழிபாடியற்றி உய்கின்றன. சில அருளாளர்களுக்கு ஆண்டவனின் அருள் கிட்டியமையால் உலகமெல்லாம் போற்றும்படியான செய்திகள் நின்று நிலவுகின்றன. இவ்வாறு ஒரு நாமம் ஒரு உருவம் இல்லாத் இறைவனுக்கு, பற்பல உருவங்களும் பெயர்களும் அமைந்தன. அப்படி அவை அமைந்ததன் நோக்கம் ஆன்மாக்கள் வழிபட்டு உய்யும் பொருட்டே ஆகும்:

"ஒரு நாமம் ஒருருவம் ஒன்றும் இல்லார்க்கு ஆயிரம்

திருநாமம் பாடிநாம் தென்னேணம் கொட்டோமோ"

என்று மணிவாசகப் பெருமான் பாடுகிறார்.

சிவ பரம் பொருளின் அவதாரங்கள் பல. அந்த அவதார மூர்த்திகளின் பெயரில் பல சமயங்கள் கூட உருவாகியுள்ளன. அவை புகட்டுவது நல்ல தர்மங்களையே. கொலை, களவு, காமம், கள்ளுண்ணல் முதலிய தீய நெறிகளை சமயங்கள் வெறுத்து ஒதுக்குமாறு வேண்டுகின்றன. தர்மம், அறம் என்பன ஒருபொருட் சொற்களேயாயினும் அறம் செய்வதென்பது மன்பதைகளாகிய உயிர்களுக்கு உய்யும் வழிகாட்டி நிற்பதே அதன் உள்நோக்கம் எனலாம்.

அருளாளர்கள், சித்தர்கள், ஞானிகள், யோகிகள் ஆகியோர் இதையே புகட்டி நிற்பர். நினைப்பவர் மனம் கோயிலாக கொண்டவனல்லவா இறைவன். இறையருளை குருவருளாலும் பெறலாம். ஒத்த நற்செயல்களாலும் பெறலாம். தவம், தர்மம், தானம் இவை அப்படிப்பட்டவையே. சைவ சமயம் இந்த மூன்று நெறிகளையும் உள்ளடக்கிய ஒரு சமயம் என்றால் மிகையாகாது.

**சைவப்புலவர்**
**கதிர். தணிகாசலம்.**

சைவ நாயன்மார்களின் அருட் செயல்கள் யாவும் இறைவனாகிய சிவ பரம்பொருளின் கருணைப் பெருக்கின் வெளிப் பாடேயாகும். இதனை விளக்கவே,

'யாதொரு தெய்வங் கொண் டீ
ரத்தெய்வ மாகியாங்கே

மாதொரு பாகனார் தாம் வருவர்'
என்கிறது சிவஞான சித்தியார்.

கவிச்சக்கரவர்த்தி கம்பர் இதனை இவ்வாறு கூறுகிறார்

"கல்லிடைப் பிறந்து போந்து கடலிடைக்
கலந்த நீத்தம்

எல்லையின் மறைகளாலு மியம்பரும்
பொருளி தென்னத்

தொல்லையின் ஒன்றே யாகித்
துறைதொறும் பரந்த சூழ்ச்சிப்

பல்பெருஞ் சமயஞ் சொல்லும்
பொருளும் போற் பரந்த தன்றே"

இவ்வகையில் அவரவர் பக்குவ நிலைக்கேற்ப நமது சைவ நாயன்மார்களுக்கு அருள்புரிந்துள்ளான் இறைவன். அவரது அருள் வெளிப்பாட்டால் திருமுறைகள் என்னும் அருட் கலசத்திலிருந்து அருளாகிய அமுதத்தை

நாமும் பருகுகிறோம். கண்ணுரக் கண்டும் உள்ளுர உணர்ந்தும் தாம் பெற்ற அருட்பிரவாகத்தை தமது திருப்பாடல்களிலே வடித்துத் தந்துள்ளனர் இந்த அருளாளர்கள்.

காரைக் காலம்மையாரின் கதையைப் படித்தோர் அவரது உள்ளமுருக்கும் திருப்பாடல்களைப் படிக்குந் தோறும் கண்ணீருகுப்பர், என்பது உண்மையல்லவா. இறைவன் அந்த அம்மையாரை ஆட்கொண்டருளிய அருமைச் செயல் உள்ளத்தை நெகிழவைக்கும் பான்மையது. இறைவனை நயந்து வேண்டிப் பெற்ற பேயுருவம் வாய்த்தபின் அவருக்குக் கிடைத்த பேரானந்தம் எவருக்குக் கிடைக்கும் என்று வியப்படைகின்றோம் அல்லவா.

> திருமுறைகள் என்னும் அருட் கலசத்திலிருந்து அருளாகிய அமுதத்தை நாமும் பருகுகிறோம். கண்ணுரக் கண்டும் உள்ளுர உணர்ந்தும் தாம் பெற்ற அருட்பிரவாகத்தை தமது திருப் பாடல்களிலே வடித்துத் தந்துள்ளனர் இந்த அருளாளர்கள்.

"இனியோ நாம் உய்ந்தோம் இறைவன் அருள் சேர்ந்தோம்

இனியோர் இடரிலோம் நெஞ்சே" என்றும்,

"பிரானவனை நோக்கும் பெருநெறியே பேணிப்

பிரானவன் தன் பேரருளே வேண்டி" எனவும்,

" நீவிர் எல்லோரும் - உய்யும் மருந்தினை உண்மின்" எனவும்,

அம்மையார் எம்மெல்லோரையும் வேண்டுகின்றார் – "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்றவாறு.

சுந்தரர் பெருமான் சொல்கிறார் –

'சாதலும் பிறத்தலும் தவிர்த்தெனை வகுத்துத்

தன்னருள் தந்த எம் தலைவனை" என்றும்,

"மற்றுப் பற்றெனக் கின்றிநின் திருப்பாதமே மனம் பாவித்தேன் .

பெற்றலும் பிறந்தேனினிப் பிறவாத தன்மை வந்தெய்தினேன்" என்றும் பாடிப் பரவுகின்றார்.

மணிவாசகப் பெருமானோ தனது தேனினுமினிய பாடல்களில் இவ்வாறு பகர்கிறார்.

"அன்றே என்தன் ஆவியும் உடலும் உடைமை எல்லாமும்

குன்றே அனையாய் என்னை ஆட்கொண்ட போதே கொண்டிலையோ" யோக சாதனைகளில் வல்லி கருவூர்த்தேவர் ஒரு பாடலில் இவ்வாறு பாடிப் பரவசப்படுகின்றார்.

"என்னை உன் பாத பங்கஜம் பணிவித்து என்பெலாம் உருக் நீ எளிவந்து

உன்னை என் பால் வைத்து எங்கும் எஞ்ஞான்றும் ஒளிவற நிறைந்த ஒண்சுடரே"

அருளாளர்கள் எமது சைவத் திருமுறைகளில் உள்ள 18,449 பாடல்களிலும் தாம் பெற்ற அநுபூதி இன்பத்தை விளக்கி நெக்குருகிப் பாடி எமக்கு அவற்றை அளித்துச் சென்றுள்ளனர். சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு வழிகளிலும் ஒன்றையேனும் உள்ளன்போடு பின்பற்றி ஒழுகினால் அப்பெருமானுடைய பாத கமலங்களை அடையலாம். நாயன்மார் களுடைய வாழ்க்கை வரலாறுகளே இதற்குத் தக்க சான்றாகும். அவர்கள் காட்டிய வழியே "நால்வர் காட்டிய வழி" யாகும். இவர்கள் "சிவபிரான் ஒருவரே தியானிக்கத் தகுந்தவர் என்பதை நிலைநாட்டியவர்களாவர் "சிவனை அறிந்தவர் எல்லா மறிவர்"

சிவபுண்ணியங்களைச் செய்யும் போது சிறிதாவது மனதைப் பிறிதொன்றிற் செல்லவிடாது சிவபெருமானது திருவடிகளிலே செலுத்துக என்பது அருளாளர் வாக்கு.

# விரதங்களின் பலன் !

சிற்றின்ப ஆசை நிறைந்த ஒரு குடும்பியை ஆன்மிக உலகிற்குக் கொண்டு வரும்போது, கரையில் பிடித்துவிட்ட மீனைப் போன்று துடிப்பதைக் காணலாம். பலருக்கும் உண்மையான துறவிகளைக் காணும்போதும், தீர்த்தத்தலங்களுக்குச் செல்லும் போதும் உண்டாகின்ற வெறுப்பிற்கும் அருவருப்பிற்கும் காரணம் இதுதான். இவ்விதமே கொஞ்சமாவது ஆன்மிக ஒளிபெற்ற ஒருவனுக்கும் தனி உலகியலான சூழ்நிலையில் வாழ்வதற்கு வருத்தமாகத்தானிருக்கும். இவ்விரண்டு நிலைகளையும் எண்ணித்தான் விரிந்த கொள்கை கொண்ட இந்து தருமம் இவ்வுலக வாழ்க்கையில் நடுவுநிலையான ஒரு போக்கை உபதேசிக்கின்றது. இதைத்தான் "யோக: கர்மஸு கௌசலம்" எனக் கூறுகின்றது. இவ்வாறு ஆன்மிக நோக்கத்துடன் வாழ்கின்ற ஒரு குடும்பத்தில் விரதம்-நோன்பு இவைகளுக்கு ஒரு முக்கிய இடமுண்டு. வாழ்வில் இன்பதுன்பங்கள் ஏற்படுவது இயல்பென்றாலும், தன்னைத்தான் தூய்மைப்படுத்த ஒருவன் முனையும்போது அதனாலுண்டாகும் துன்பங்களைப் பொறுக்கத்தான் செய்வான். இங்ஙனம் மனப்பூர்வமாக தனது மனோவாக்குக் காயங்களைத் தூய்மையாக்க விரதங்கள் எடுக்கின்ற ஒருவனை குடும்பத்திலுள்ள ஏனையோரும் பின்பற்றும்போது, அக்குடும்பம் முழுமைக்குமே புனிதம் ஏற்படுகிறது. உடல் உள்ளங்களைத் தவத்தில் ஈடுபடுத்தும் விரதங்கள் உலகியல் பார்வையில் துன்பமயமானவையெனினும், அவைகளைத் தாமே ஏற்றுக்கொள்ளுதல் எவ்வாற்றானும் சிறந்ததே என்பது சுருதியுக்தி அனுபவமாகும்.

உள்ளம், உடல், வாக்கு என்ற மூன்று விதமாக விரத நோன்புகள் உண்டு அஹிம்சை (இன்னா செய்யாமை), சத்தியம் (வாய்மை), கள்ளாமை, பிரம்மச்சரியம் (புலனடக்கம்), நேர்மை என்றிவை மனத்தாலான விரதம். ஒருவேளை, இறைவன் பிரசாதம் சாப்பிட்டோ, முற்றிலும் சாப்பிடாமலோ, இரவு தூக்கமில்லாமலோ, இருப்பது உடம்பாலாகிய விரதம், மௌனம், இன்சொல் கூறுதல், உண்மை சொல்லல் இவை வாக்காலாகிய விரதம்.

குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டு விரதத்தை மூன்றாகப் பிரிக்கலாம்.

1. புண்ணியம் தேடுவதற்காக ஏற்றுக்கொள்ளும் ஏகாதசி முதலிய விரதங்கள் நித்தியவிரதம் எனப்படும்.

2. பாவமன்னிப்பிற்காக நோற்கப்படும் சாந்தாராயணம் முதலிய விரதங்கள் நைமித்திகம் என்று கூறப்படும்.

3. இன்பம், செல்வம் முதலியவற்றிற்காக நோற்கப்படுகின்ற சாவித்திரி, சோமவார விரதங்கள் காமிய விரதங்கள் எனப்படும்.

ஏதாவது ஒரு புண்ணிய நாளிலோ, நட்சத்திரத்திலோ, திதியிலோ, திரிகரண சுத்தியுடன் உண்டி சுருக்கி விதிவழுவாது காக்கப்படுவது விரதம். பொருள் செலவு செய்து ஒருவேளை நல்ல உணவு உண்டு நோற்பது லௌகீக விரதம். மனோவாக்கு காயங்களை அடக்கி உண்ணாது நோற்பது வீடுபேற்றை அளிக்கும். நோக்கங்களின் அடிப்படையிலே நித்திய, நைமித்திக, காமியங்களாக விரதத்தை வகுத்துள்ளனர். அதாவது எந்த விரதத்தை கட்டாயம்

நோற்க வேண்டுமோ அல்லது எதை நோற்காது இருந்தால் பாவம் உண்டாகுமோ அது 'நித்தியம்'. சிறப்பான நாட்களில் சிறப்பான ஒழுக்கத்துடன் நோற்கப்படுபவை 'நைமித்திகம்'. குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட விருப்பம் நிறைவேறுவதற்காக நோற்கப்படுபவை 'காமியம்'. விரதமும், உபவாசமும் ஒரே பொருள் கொண்டவை எனினும், உண்ணாவிரதத்தையே உபவாசம் என்று சொல்வர். தன்னைத் தூய்மைப் படுத்தலுக்கும். ஆன்ம விடுதலைக்கும் வேண்டி அநுட்டிப்பவையே விரத உபவாசங்களாகும்.

இந்த விரதத்தை மேற்கொள்ள இருக்கும் நாளைக்கு முந்திய நாளில் பொறி, புலனடக்கம் கொள்ள வேண்டும். விதிப்படி விரதம் மேற்கொண்ட பின்னரும் அதன் பயனை தன்னுள் உறுதிப்படுத்துகின்ற பாரணை முதலிய கிரியைகள் கூட விரத நாளுக்கு அடுத்த நாள் மேற்கொள்ள வேண்டும்

அறநூல்கள் வழிப்படி விரதம் நோற்பவருடைய ஆன்மா தூயஒளி பெற்றுத் துலங்கும். அவர்களுடைய மதியும் தெளிந்து பக்தியும், சிரத்தையும் வளர்கின்றன. ஞானசக்தி, விசாரசக்தி, கிரியாசக்திகள் வளர்கின்றன. உள்ளம், உடல் இவைகளைப்பற்றிய துன்பம், நோய்களிலிருந்து அவர்கள் விடுதலையடைகின்றனர்.

இத்தகைய குடும்பங்கள் நிறைந்த நாடு நலமும், நன்நிறைவும் பெற்றதாய் இருக்கும். குடும்பநிலையில் மேற்கொள்ளப்படும் யக்ஞம், ஹோமம், விரதம், உபவாசங்கள் இவைகளில் குடும்பத்தலைவனும், தலைவியும் (கணவனும், மனைவியும்) ஒன்றுபோல பங்குகொள்ள வேண்டும். ஏதாவது காரணத்தால் மனைவிக்கோ, கணவனுக்கோ பங்கு கொள்ள முடியாதிருந்தால் அவ்விரதம் குடும்பத்திற்கு நலன் தருவது சந்தேகம். அவர்களில் ஒராள் குறைவுற்றால் மற்றவர் இல்லாதவரின் பிரதிநிதியாக விரதம் மேற்கொள்ள வேண்டும். இவ்வித நோன்புகளில் குடும்பத்தலைவனும், தலைவியும் ஒன்றுபோல் அக்கறைகாட்ட வேண்டுமென்றும் கூடிய மட்டும் இருவரும் ஒன்றாகவே, பரஸ்பர பிரதிநிதி என்ற நிலையிலே விரதம் மேற்கொள்ள வேண்டுமென்றும் அறநூல்கள் கூறுகின்றன. புண்ணிய செயல்களில் கணவன், மனைவியர் தங்களுக்குள் ஒற்றுமையும், இணக்கமும் இருந்தாலே அன்பும் ஆனந்தமும் உண்டாகும். அன்பு அறங்களுக்கு பொருளும், இன்பமும் அடங்கியிருந்தாலே அமைதியும், திருப்தியும் நிலைநிற்கும். அன்பு புருஷார்த்தப் பேற்றின் நெடுஞ்சாலையாகும். அன்பை வளர்க்காத பொருளும், இன்பமும் துன்பத்தைக் கொடுக்கும். அது விலங்கியல் வாழ்க்கைக்கே வழிகாட்டும்.

இவ்வித நோன்புகளில் குடும்பத்தலைவனும், தலைவியும் ஒன்றுபோல் அக்கறைகாட்ட வேண்டுமென்றும் கூடிய மட்டும் இருவரும் ஒன்றாகவே, பரஸ்பர பிரதிநிதி என்ற நிலையிலே விரதம் மேற்கொள்ள வேண்டுமென்றும் அறநூல்கள் கூறுகின்றன. புண்ணிய செயல்களில் கணவன், மனைவியர் தங்களுக்குள் ஒற்றுமையும், இணக்கமும் இருந்தாலே அன்பும் ஆனந்தமும் உண்டாகும்.

விரதத்தை மேற்கொண்ட கணவனின் நற்செயல்களில் கற்புடைய மனைவி திறந்த உள்ளத்தோடு துணைநிற்பாளாயின் அதனால் வரும் புண்ணிய பலத்திற்கு

இருவரும் சரிபங்காளிகளாவர்; அது போலவே விரதம் மேற்கொண்ட மனைவியின் நற்செயல்களில் துணைநிற்கும் கணவனுக்கும் உண்டாகும். பிரேமம் உள்ள இடத்தில் காமம் ஒழிந்து, அறம் தழைத்து அக்குடும்பம் மனநிறைவும், தன்னடக்கமும் உடையதுமாகும்.

நற்செயல்களிலேயே ஈடுபடும் நல்லோர்களுடைய கூட்டுறவுதான் சத்சங்கம் எனப்படுவது. புனித விழாக்களை ஒட்டி விரதங்களும், சத்சங்கங்களும் நிகழ்கின்றன. இறைவனது அவதாரங்கள், சித்தர்கள், யோகிகள், ஆச்சாரியர்கள் ஆகிய பெரியோர்களின் பிறந்தநாட்களையே ஜெயந்தியாக கொண்டாடுகிறோம். புனித திதிகள், ஜெயந்திகள், அமாவாசை, பௌர்ணமி, சங்கராந்தி (மாத தொடக்கம்), கிரகணம் முதலிய புண்ணிய நாட்களில் தீர்த்தமாடல், விரதம், உபவாசம், சிரார்த்தம், ஈகை, ஜெபம், விழா என்பவை நடத்துகிறோம். பாத்திரம் அறிந்து அறம் தழைப்பதற்காகதானம் செய்யவேண்டும்.

எண்ணற்ற விரதவிழா நாட்கள் இந்துக்களுக்கு உண்டு என்று அறிந்து ஏதேனும் சிலவற்றையாவது கைக்கொண்டு அநுசரிக்க வேண்டும். ஸ்ரீ சித்ராபௌர்ணமி, திருக்கார்த்திகை, விநாயகசதுர்த்தி, ஸ்கந்தஷஷ்டி, வைகுண்ட ஏகாதசி, சாதுர்மாசியம் முதலிய புண்ணிய நாட்களைப் போலவே ஞாயிறு, திங்கள் என்ற முறைப்படி எல்லா நாட்களும் இந்துக்களுக்கு சுபவிரத தினங்களாகும். அவைகளில் தனது உடல், உள்ளங்களுக்குப் பொருத்தமான சில விரதங்களை மேற்கொண்டு ஒழுகுவதற்கு உரிமை உண்டு. சில விரத விழாக்களுக்கு சில இடங்களில் மிக முக்கியத்துவம் இருப்பினும் மற்ற இடங்களிலும் அவைகள் இல்லாமல் இல்லை. சான்றாக மகர சங்கராந்தி, பொங்கல் என்ற பெயரில் தமிழ் நாட்டிலும், சிராவணி (ஆவணி) திருவோணம், ஓணம் என்ற பெயரில் கேரளத்திலும், நவராத்திரி, துர்க்கா பூஜை என்ற பெயரில் பெங்காலியிலும், விநாயகசதுர்த்தி, கணேச உற்சவம் என்ற பெயரில் மகாராஷ்டிரத்திலும், விஜயதசமி, தசரா என்ற பெயரில் உத்தரப்பிரதேசத்திலும், தேர்த்திருவிழா, ரத யாத்திரை என்ற பெயரில் ஒரிஸாவிலும் மிகமுக்கியமாகக் கொண்டாடப்படுகிறது. பாரத தர்ம பரம்பரையின் அடிப்படையான அம்சங்களே ஒவ்வொரு தேசிய விழா என்பதே இதன் கருத்து. இது போலவே ஸ்ரீகிருஷ்ண ஜன்மாஷ்டமி, ஸ்ரீராம நவமி, ஸ்ரீ வியாசஜெயந்தி, குருபூர்ணிமா, கீதாஜெயந்தி, முதலிய ஜெயந்தி தினங்களும். சுருங்கச் சொன்னால், தனிமனிதனின் ஆன்மிக முன்னேற்றத்திற்கும், சமூகத்தின் நலத்திற்கும் உதவுகின்ற பாங்கிலேயே ஒவ்வொரு விரத விழாவையும் ஏற்படுத்தியிருக்கின்றனர். தேச, கால குணங்களுக்கொத்தபடி எல்லோரும் அவைகளைக் கொண்டாடலாம். ஒவ்வொரு விரதத்திற்கும் ஜெயந்திக்கும் புராணக்கதைகள் உண்டு. தீமைகளையும், கொடுமையையும் வெற்றி கொண்டு நலத்தையும், அறத்தையும் நிலைநாட்டுகின்ற பழக்க வழக்கங்களே அவைகள். தனிமனிதனுடைய வாழ்வைப் போலவே குடும்பம், சமூகம், நாடு என்ற நிலைகளிலும், மறம் அழிந்து அறம் வெற்றிகொள்ள வேண்டுமென்பதுதான் விரதவிழா ஜெயந்தி கொண்டாட்டங்களின் உட்பொருளாகும்.

# சக்தி வழிபாடு

புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை

நாம் காணுகின்ற இவ்வுலகம் "அம்மை அப்பர்" வடிவானது. எனினும், அம்மைக்கே முதலிடம் கொடுக்கின்றோம். அம்மையை நாம் இயல்பாகவே அறிந்து கொள்ளுகின்றோம். அம்மை காட்ட அப்பனைக் காண்கின்றோம். பின்னர் இருவரையும் ஒன்றாகக் காண்கின்றோம். இந்த இரண்டு காட்சிகளிலும் அம்மையைக் காணும் காட்சி இயற்கை. அப்பனைக் காணும் காட்சி செயற்கை. இதனாலேதான் அநுபூதிமான்கள் பலர் இறைவனை அம்மை வடிவத்தில் கண்டு ஆனந்தமடைகிறார்கள். இந்த உலகினை மாத்திரமல்ல, அண்ட சராசரங்களையுமே அம்மை வடிவிற் கண்டு சாந்தியடைகின்றார்கள்.

இறைவனை அம்மையே அப்பா என்று அழைக்கின்றார் மணிவாசகப் பெருமான். தோடுடைய செவியன் என்று அம்மையை முன்வைத்துத் தமிழோடிசை பாடுகின்றார் சம்பந்தப் பிள்ளையார். மலர்ச் சிலம்படி வாழ்த்தி வணங்குகின்றார் சேக்கிழார் சுவாமிகள். "தேவிநின்னருள் பெறாத தேயமோர் தேயமாமோ" எனப்பாடி இறைவனை அம்மை வடிவிற் காண்கின்றார் பாரதியார்.

சர்வம் சக்திமயம், அண்ட சராசரம் கண்கண்ட தெய்வம் , படைத்தல், காத்தல், அழித்தல் மூன்றும் சக்திமயமே. படைத்தல் மாத்திரம் நிகழ்ந்தால் உலகம் தாங்குமா? காத்தல் மாத்திரம் நிகழ்ந்தால் உலகம் பழைமை நீங்குமா? அழித்தலும் நிகழ்ந்தால்தான் உலகம் புதுமை பெறும்; சுமை குறையும்; வாழ்க்கை இலேசாகப் போய்க்கொண்டிருக்கும். உலகில் படைத்தலும், காத்தலும், அழித்தலும் ஒன்றுக்கொன்று உதவியாக நிகழ்கின்றன. இந்த உண்மையினை மக்கள் உணர வேண்டும், உணர்ந்தால் மீட்சியுண்டாம்.

அழிவு ஆக்கம் தருகின்றது. ஒரு குடிசையை அழிக்கின்றோம். அந்த இடத்தில் ஒர் அழகான மாளிகையை ஆக்குகின்றோம். இங்கே அழிவு ஆக்கமாகின்றது. ஒரு நெல்மணி வயலிலே அழிகின்றது; இதனால் ஆயிரம் நெல்மணிகள் பிறக்கின்றன. இவ்வாறே அழிவும் ஆக்கமும், அழிவைக் கண்டு நாம் பயங் கொள்ளல் ஆகாது.

வயலிலே களை அழிகின்றது. நெற்பயிர் ஆக்கம் பெறுகின்றது. சமூகத்திலே கெட்டவன் அழிகின்றான். அவனோடு கேடும் அழிகின்றது. இதனால் நல்லவன் ஆக்கம் பெறுகின்றான், நன்மையும் விருத்தியடைகின்றது. "நூற்றிரண்டு மலைகளைச் சாடுவோம் நுண்ணிடைப் பெண் ஒருத்தி பணியிலே" என்று பாரதியார் பாடுகின்றார். பெண்களில் அவ்வளவு நம்பிக்கை ஏன்? பெண் சக்திவடிவானவள்.

உலகம் சக்திமயம். இதனால் சக்தி வழிபாடு நிலைபெற்றுத் திகழ்கின்றது. நமது உடம்பிலே சக்தியிருந்தால்தான் நாம் உண்ணவும், உலாவவும், உறங்கவும் முடியும். நம்முள்ளே சீவன் இல்லாவிடில் நமது சடசக்தி இயங்குமா? சடசக்தியின் இயக்கத்துக்கு சீவசக்தியின் இயக்கம் அவசியம். சீவசக்தியின் இயக்கமின்றிச் சடசக்திக்கு இயக்கமில்லை. மனித சக்தியில்லாமல் அணுச்சக்தி இயங்குமா? இந்த உண்மையை உணர்ந்தால் விஞ்ஞானம் மெய்ஞ்ஞானத்துக்கு வழிவகுக்கும். இதனை நாம் உணரவேண்டும்.

சடசக்திகள் அனந்தம், சீவசக்திகள் அவற்றினும் அனந்தம். சடசக்தி, சீவசக்தி, சிவசக்தி எனச் சக்திகளை மூன்றாகக் காண்கின்றோம் சிவசக்தியையும் நாம் மூன்றாகக் கண்டு வணங்குகின்றோம்.

நமது உலக வாழ்க்கையும் மூன்றாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. வீரம், செல்வம், கல்வி, இம்மூன்றும் ஒன்றானதே வாழ்க்கை, மூவரும் ஒருவரானவரே கடவுள்.

வீரம் ஆக்கத்துக்குக் காரணமான அழிவுச்சக்தி; இதனைத் துர்க்கை, காளி, மாரி முதலிய திருநாமங்களால் வழிபடுகிறோம். செல்வம் காத்தலுக்குக் காரணமான ஆக்கச் சக்தி. இதனை இலட்சுமி, திருமகள் முதலிய திருப்பெயர்களால் வழிபடுகின்றோம். கல்வி அறிவுக்குக் காரணமான ஆக்கச் சக்தி. இதனை சரசுவதி, கலைமகள் முதலிய திருநாமங்களால் வழிபடுகின்றோம்.

சக்தி வழிபாடு உருவும் உணர்ச்சியும் தந்து தன்னம்பிக்கையை வளர்ப்பது. சக்தி வழிபாடு பற்றிய பாடல்களும் உருவும் உணர்ச்சியும் ஊட்டும் பக்திவடிவானவை. மந்திரசக்தி பெற்றவை. இத்தகைய பக்தி பெற்ற பாடல்கள் ஈழநாடு முழுவதிலும் பல்லாயிரக் கணக்கில் பரந்து வழங்குகின்றன.

(திருக்கோணமலை பத்திரகாளியம்மன் ஆலயப்பதிக வெளியீட்டிலிருந்து)

# "நேரமில்லை"

ஸ்ரீமத் சுவாமி கங்காதரானந்தா

நாம் கலியுகத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிறோம். கலியுகத்தில் ஆன்ம ஈடேற்றத்துக்குப் பஜனை இலகுவான வழிமுறையாகும். இவ்வுலகை இரண்டு வித அணுக்கள் சேர்ந்து இயக்கி வருவது போன்று, ஆண்களும், பெண்களும் இந்த நாமபஜனையை உளமாரப் பாடிப் பயனடைய வேண்டும். பஜனை பாடுவதற்கு மனச்சங்கடங்களோ கூச்சமோ இருக்கக் கூடாது. வாயைத் திறந்து, மன ஆழத்தில் அதனுடைய கருத்துக்கள் பதியக்கூடிய மாதிரிப் பாட வேண்டும்.

அதிகாலை பிரம்ம முகூர்த்தத்தில் உள்ளக் கசிவுடன் பஜனை பண்ணுவதால் நிறையப் பலன் உண்டு. எங்களுடைய உடலில் இருக்கின்ற எழுபத்திராயிரம் நாடி நரம்புகளும் அதன்பால் ஈர்க்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டு, புதிய பொலிவுடன் இயங்கத் தொடங்கும். அன்றாட வாழ்க்கையில் பல புதிய மாற்றங்களையும் அபூர்வ சக்தியையும் அது கொடுக்கும்.

---

**ஆத்மீக நெறியைப் பின்பற்ற-கலந்து கொள்ள-எமக்கு நேரமில்லை என்று துணிந்து இந்துக்கள் கூறகின்ற அறியாமையை என்னவென்று சொல்வது?**

---

எங்களுடைய வாழ்க்கையில் கிரக நிலைகளாலும், அதன் தோஷங்களாலும், கோளாறுகள் ஏற்பட்டு பல கஷ்டங்களை அனுபவிப்பதாக முடிவு கட்டி விடுகிறோம். மேலும் பிரச்சனைகளையும் துன்பங்களையும் கூட்டிக் கொள்கிறோம்.

இப்படியான எண்ணத்தை நாம் பஜனையால் நிச்சயமாக மாற்றமுடியும். கிரக நிலைகளையும், அதன் தோஷங்களையும் நிச்சயம் வெல்ல முடியும் என்று மகான்கள் கூறுகின்றனர். மகாத்மா போன்ற மகான்கள் தமது அன்றாட கருமத்தில் நாமபஜனையிலும் ஜெபத்தியானத்திலும் தம்மை ஈடுபடுத்தி வெற்றி கண்டனர்.

இத்தகைய ஒரு சிறந்த மார்க்கத்தின் மூலம் ஆன்மாடேற்றத்தை அடையமுடியாமல், இந்துக்களிடையே பரம்பரை பரம்பரையாக பாட்டன் காலத்திலிருந்து ஒரு சொல் உபயோகத்தில் இருந்து வருகிறது. "நேரமில்லை" என்ற இந்தச் சொல்லைத் துணிந்து கூறும் அறியாமை இன்றுவரை தொடர்கிறது. இது ஒரு குறைபாடும் மகாதவறும் என்றே கூறவேண்டும்.

உலக கருமங்களை எடுத்துக் கொண்டாலும் ஒவ்வொருவரும் ஆத்மீக ஒழுக்கத்திலிருந்து தவறி விடுகிறோம். இரண்டு குழந்தைகளை நன்கு வளர்க்க முடியாமல் திண்டாடுதல் பொருள், பண்டம், பணம் இவற்றைத் தேடுவதிலேயே முழு நேரத்தையும் கழித்தல். உத்தியோகம், கடமை, பட்டம், படிப்பு இப்படியாகப் பல காரணங்களைக் காட்டி, ஆன்மீக நெறியிலிருந்து தவறிவிடுகின்றனர்.

ஆத்மீக நெறியைப் பின்பற்ற-கலந்து கொள்ள எமக்கு நேரமில்லை என்று துணிந்து இந்துக்கள் கூறகின்ற அறியாமையை என்னவென்று சொல்வது? ஒரு செயலை செயலாற்றுவதற்கு எடுத்துக் கொண்டால் உடனே பிரச்சனைகள் தோன்றிவிடும். தொடங்கும்போதும் பிரச்சனை (Problem), செயல்படுத்தும்போதும் பிரச்சனை, முடிக்கும் போதும் பிரச்சனை, எல்லாமே பிரச்சனை. மனிதன் ஒரு செயலை பிரச்சனையில் தொடங்கி, பிரச்சனையில் முடிக்கிறான். இந்தப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணச் சிந்திக்கிறான், சிந்தனையில் தெளிவில்லை, தெளிவில்லாத சிந்தனையால் சொல்லில் தெளிவில்லை, செயலிலும் தெளிவற்ற நிலை. முடிவில் பிரச்சனை தீரமுடியாமல் துன்பம் அதிகரிக்கிறது.

இத்தகைய உலகியற் கருமங்களில் மனம் ஒரு நிலைப்பட்டு சரியான குறிக்கோளுடன் வாழ்வதற்குப் பிரார்த்தனை மிகவும் அவசியமானது. அதற்குரிய நேரத்தை நாமாகவே விரும்பி ஒதுக்கி மனவிருப்புடன் ஈடுபடவேண்டும்.

இந்துக்கள் தொன்று தொட்டு தாவர போஷணிகளாக வாழ்ந்து இடையில்- ஊன் உண்ணும் பழக்கத்தைக் கடைப்பிடித்து வந்துள்ளார்கள். சில அற்ப காரணங்களைக் காட்டி, எம்மால் இதனைக் கைவிட முடியாதென நினைக்கின்றனர். உடலுக்கு ஊட்டம் தேவை இதை உட்கொள்ளாவிடின் நோய் வந்துவிடும் என்று தவறான கருத்தைக் கொண்டு உடலை வளர்க்கிறோம். இது ஒரு கீழான செயல்.


விட்டமின் குளிசைகளாலோ மிருகங்களின் புலாலினாலோ உடல் வளர்ந்து விடாது. எங்களுடைய உடலும் உள்ளமும் வளரத் தேவையான உணவு அவையல்ல. இவை ஒருபோதும் ஆன்ம சக்தியைப் பெற்றுத் தரமாட்டா.

இதற்கு எடுத்துக் காட்டாக சரியான அறநெறியை மேற்கொண்ட ஒரு அராபியப் போர் வீரனுடைய கதையைக் காணலாம்.

லெபனானில் இஸ்ரேல் மக்கட்கெதிராக போரில் ஈடுபட்ட ஓர் அராபியப் போர் வீரன் இதற்கு ஓர் நல்ல எடுத்துக்காட்டு சமால்ஜாம்செட் என்பது அவனது பெயர். பிறப்பில் அவன் ஒரு முஸ்லிம், வாழ்க்கையில் அவன் ஒரு இந்து, செயலில் அவன் ஒரு யோகி. அவன் சுத்த சைவ உணவை உண்பவன். தன் நாட்டுக்காகப் போராடும் அன்றாட கடமையிலும், காலையில் இரண்டு மணிநேரமும், மாலையில் இரண்டு மணி நேரமும் தியானத்தில் ஈடுபடுவான். ஒரு முஸ்லிமாகப் பிறந்து, சரியான முறையான இந்து தர்மத்தை அனுஷ்டித்ததை, நீங்கள் ஒவ்வொருவரும் ஆழமாக உணர்ந்து பார்க்க வேண்டும், செயற்படுத்த வேண்டும்.

இந்துக்களாகிய நாம் பொங்கல், தீபாவளி, வருடப்பிறப்பு ஆகிய பண்டிகைகளைக் கொண்டாடுகிறோம். இப்படியான முக்கிய தினங்களில் ஏதாவது நல்ல செயலை மேற்கொள்ள வேண்டும் என்று திடசங்கற்பம் கொள்ளவேண்டும். ஆன்மீக வழியில் ஈடேறுவதற்கு இத்தகைய சிந்தனைகள் பலனளிக்கும்.

# நீண்ட ஆயுளுக்கு துளசி



துளசிச் செடி சுற்றிலுமுள்ள விஷப் பூச்சிகளை விரட்டியடிக்கும். அத்துடன் நாம் வெளியிடும் கரியமிலவாயுவை உட்கொண்டு நமக்கு வேண்டிய தூய்மையான பிராணவாயுவை அதிக அளவில் வெளியிடுகிறது.

துளசிச் செடி இந்துக்கள் மட்டுமன்றி அதன் மருத்துவபயன் கருதி பிற மதத்தினரும், போற்றி வளர்த்துப் பயன் பெற இறைவனால் அளிக்கப்பட்ட ஓர் அபூர்வ மூலிகை.

துளசியைப் பறித்து சுத்தமாகக் கழுவி தண்ணீரில் குறைந்தபட்சம் எட்டுமணி நேரம் ஊறவைத்து, பிறகு கசக்கிப் பிழிந்து எடுத்துவிட்டு, அந்தநீரைப் பருகிவர கல்லீரல், மண்ணீரல் நோய்கள் வராமல் தடுக்கலாம். துளசி தீர்த்தம் மூளைக்கு சுறுசுறுப்பையும், வலிமையையும் அளிக்கிறது. துளசியைத் தொடர்ந்து சாப்பிட்டுவர ஆயுள் நீளும். வயதானாலும் நரை திரை ஏற்படாது. குழந்தை நோய்களுக்கும் இந்த துளசி கைகண்ட மருந்தாகும். துளசிச் சாற்றில் சிறிது கோரோசனை மாத்திரையைக் கரைத்து, குழந்தைகட்குக் கொடுத்து வந்தால் குழந்தைகள் நோய்கள் ஏதுமின்றி நல்ல ஆரோக்கியத்துடன் வளர்ந்து வரும்.

தலையில் உண்டாகும் பேன்களுக்கு துளசி வாசனை அடியோடு பிடிக்காது. துளசியைக் கொண்டுவந்து தலையணை மேல் நிரப்பி ஒரு வெள்ளைத் துணியால் மூடி அதன்மீது தலையை வைத்துத் தூங்க, விரைவில் தலையில் இருக்கும் பேன்கள் அனைத்தும் இறந்து நீங்கிவிடும்.

மூக்கடைப்பு, மூச்சுத் திணறல், சளி, எச்சில்தழும்பு இவைகளுக்கும் துளசிச்சாறு மிகவும் பயன்படும்.

துளசி இலை இதய நோய்க்கு மிகவும் உகந்தது. துளசி இலைச்சாறு ஐந்து துளியுடன் நல்லதேன் 20 துளி சேர்த்துக் கலந்து அத்துடன் சிறிதளவு வெந்நீர் கலந்து காலை, மாலை வெறும் வயிற்றில் சாப்பிட இதய நோய் மிகவிரைவில் மட்டுப்படும்.

கொழும்புத் தமிழ்ச் சங்கம்

# கீதா உபதேசம்

## ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸுவாமிகள்

ஒரு குடும்பத்திற்கு இவ்வளவு சர்க்கரை, இவ்வளவு அரிசி, இவ்வளவு எண்ணெய் என்று நபர்களின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு ரேஷன் கார்டுகளில் உணவுப்பண்டங்கள் விநியோகிக்கப்படுகின்றன. அந்தக் கார்டை எடுத்துக் கொண்டு ரேஷன் கடைக்குச் சென்று கார்டில் கொடுக்கப்பட்ட அளவுதான் வாங்க முடியும். பணம் போதவில்லையானால் குறைத்து வாங்கிக் கொள்ளலாம். ஆனால் பணம் இருக்கிறதே என்று அதிகமாக வாங்கிக் கொள்ள முடியாது. அதுபோல், "வரிசை எண் படிதான் கொடுப்பேன். பிறகு வாருங்கள் !" என்று கடைக்காரர் விரட்டிவிட முடியாது.

அப்படித்தான் ஒவ்வொரு மனிதனும் "விதி" என்னும் கார்டுடன் உலகத்திற்குள் வருகிறான். முற்பிறவியின் பலாபலன்கள் என்று பிறவியை வரிசைப்படுத்துவதில்லை. அவனது அனுபவங்களை அவனது மனப்போக்கிற்கு ஏற்பப் பாகுபடுத்திக் கொள்கிறான். சிலர் தேவைக்கு மீறி செய்ய முற்பட்டு தோல்வியுறுகிறார்கள். சிலவற்றை தேவையில்லை என்று குறைத்துக் கொள்கிறான். சிலநேரத்தில் ஒன்றுமே வேண்டாம் என்று துறவு கொள்கிறான். அட்டவணையில் உள்ளபடி அளக்கப்பட்டாலும், மனிதனின் அடிப்படை எண்ணங்கள் அட்டவணையை மாற்றி அமைக்கிறது.

'கடவுள் என்னை ஏன் தண்டிக்கிறார் !' என்று கடவுளை நிந்திப்பதில் அர்த்தமில்லை. முன்னால் செய்த காரியத்தின் தொடர்தான் இன்று நடக்கும் விஷயங்களும். இன்று விதைத்த விதை நாளையே மரமாகி விடுவதில்லையே? அதுபோல், என்றோ நாம் செய்த காரியத்தின் விளைவுதான் இன்று நடக்கும் விஷயங்களாகும். இதில் உடனுக்குடனே (பிரத்யட்சமாக) கண்ணுக்கு எதிரில் நடக்கக்கூடிய விஷயம், மழை பெய்வதற்காக "வருணஜபம்" யாகம் செய்வதாகும். சிறிது தூற்றலாவது தூறாமல் போகாது.

ஜபங்கள், சுலோகங்கள், மந்திரங்கள் இவையாவும் அதிக சக்தி வாய்ந்தவை. அவை ஆகாயத்தில் சதா சஞ்சரித்துக் கொண்டிருக்கின்றன. "ஆகாயம்" என்றால் மேலே கைகாட்டுவதுதான் வழக்கம். ஆனால், "ஆகாயம்" என்றால் எங்கும் பரவியிருப்பது என்ற பொருளாகும். "பரவெளி" என்பதுதான் ஆகாயம் ! மனிதன் தோன்றிய காலந்தொட்டு ஆகாயத்தில் சப்தங்கள் இருக்கின்றன. அதனை மனிதன் தியானசக்தியால் காதால் கிரகித்துக் கொண்டு வாயால் தன்னை சுற்றியுள்ளவர்களுக்குச் சொல்லி வந்தான். இப்படித்தான் வேதம் பிறந்தது. பனியில் நடந்து போகிறோம். சிறிது நேரத்தில் தலை ஈரமாக இருக்கிறது. காதுக்குள் ஈரம் இருக்கிறது. நாம் தண்ணீருக்குள் நனையவில்லையே? எப்படி ஈரமாகியது என்று வியப்பதில்லை. பனிமூட்டத்தில் நீர்த்திவலைகள் இருப்பதை அறிவோம். அதுபோலவே ஒலி அலைகள் பிரபஞ்சம் எங்கும் பரவியுள்ளது. வேதங்கள் யாவும் சத்தியமான வார்த்தைகள்.

பலனை எதிர்பார்க்காமல் வேலையில் ஈடுபடுவதுதான் மிகவும் உயர்ந்த நிலையாகும். முழுமனதுடன் ஒரு வேலையில் ஈடுபடும்போது அதன் பலாபலன்கள் தாமாகவே பழுத்த பழம் கிளையிலிருந்து விடுபடுவதுபோல் விடுபட்டுவிடும். காரியலயத்துடன் செய்யும் பணியில் முழுக்கவனம் இருப்பதில்லை. அதனால் பலனும் முழுமையாகக் கிடைப்பதில்லை. இந்த வேலையை இப்படித்தான் செய்ய வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கும் முறையில் செய்தால், நிர்ணயிக்கப்பட்ட பலனும் நிச்சயமாகக் கிடைக்கும்.

'கடவுள் என்னை ஏன் தண்டிக்கிறார் !' என்று கடவுளை நிந்திப்பதில் அர்த்தமில்லை. முன்னால் செய்த காரியத்தின் தொடர்தான் இன்று நடக்கும் விஷயங்களும். இன்று விதைத்த விதை நாளையே மரமாகி விடுவதில்லையே? அதுபோல், என்றோ நாம் செய்த காரியத்தின் விளைவுதான் இன்று நடக்கும் விஷயங்களாகும்.

"தாத்தா, சித்தப்பா, குரு என்று உறவினர்கள் எல்லோரும் இறந்து விடுவார்களே! என்று பாசத்தால் கட்டுண்டு போர் புரியாமல் இருந்தால் அதன் விளைவுகள் விபரீதமாகத் தான் முடியுமே தவிர, அனுகூலம் ஏற்படாது. யுத்தகளத்திற்கு வந்தவுடன் பேதலிக்கக் கூடாது. அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்ட வேண்டும் என்ற குறிக்கோளுடன் போரைத் துவங்கு ! வெற்றி தானாகக் கிட்டும்" என்று பார்த்தனுக்கு கண்ணன் உபதேசம் செய்கிறார். தாமரை இலைத் தண்ணீர் உறவு மனப்பான்மை நம்மை பந்தம் என்ற சுழலிலிருந்து விடுவிக்கும்.



# காப்பியில் மறைந்த சர்க்கரை!

ஆபீசிலிருந்து கணவன் களைத்துப் போய் வீட்டுக்கு வருகிறான், அங்கே மேலதிகாரி அவனிடம் கடிந்து கொண்டிருக்கிறார். அதனால் அவனுடைய மனம் சோர்ந்து போயிருக்கிறது. வீட்டுக்கு வரும்போதே ஆத்திரம் பொங்கிக் கொண்டு வருகிறது. ஆனால் அதை வெளியே யாரிடமும் காட்ட முடியவில்லை. வீட்டில் மனைவியிடமோ, குழந்தைகளிடமோ தான் காட்ட முடியும்.

வாசலில் "கேட்" டை அவன் திறக்கும் சப்தத்திலிருந்தே மனைவி, அவனுக்குக் கோபம் வரப் போகிறது என்று தெரிந்து கொண்டு விட்டாள். குழந்தைகளிடம் "அப்பா வருகிறார் !" என்று சொல்லுகிறாள். அந்தக் குரலிலிருந்து, அப்பா எப்படி வருகிறார் என்று குழந்தைகள் புரிந்து கொண்டு விட்டன. மூன்று வயது கடைக்குட்டியைத் தவிர மற்றவை மாயமாக மறைந்து விட்டன !

அவன் உள்ளே வருகிறான். ஏதாவது ஒரு சாக்கில் கோபித்துக் கொள்ள வேண்டும் என்று தேடிப் பார்க்கிறான். வாசல் சுத்தமாகத் துடைக்கப்பட்டு அழகாகக் கோலம் போடப்பட்டிருக்கிறது. வாசற் படியைத் தாண்டி உள்ளே கவனிக்கிறான். துளி அழுக்கு இருக்க வேண்டுமே? செருப்புக்கள் கூட வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. குழந்தைகளின் புத்தகங்கள் கூட இறைபடாமல் ஒழுங்காக "ஷெல்"பில் இருக்கின்றன.

பல்லைக் கடித்துக்கொண்டு, செருப்பை உதறிவிட்டு உள்ளே போகிறான். கோபிக்க ஒரு "சான்ஸ்" கூடக் கிடைக்கவில்லையே ! சாப்பிடும் மேஜையின் முன் உட்கார்ந்து கொள்கிறான். அது நறுவிசாக, "பளிச்" என்று இருக்கிறது. அவன் உட்கார்ந்ததும் உள்ளே இருந்து காப்பி வருகிறது. மனைவி கொண்டு வரவில்லை. மூன்று வயதுக் குழந்தைதான், கப்பையும் சாஸரையும் பத்திரமாகத் தூக்கிக் கொண்டு வந்து மேஜையின்மேல் வைக்கிறது. மனைவிக்குத் தெரியும். அவளே வந்தால் ஏதாவது ஒரு சாக்கில் அகப்பட்டுக் கொள்வாள் என்று.

காப்பியை எடுத்துப் பருகுகிறான். இதோ சான்ஸ் கிடைத்து விட்டது. "யார் குடிப்பார்கள் இந்த காப்பியை? உங்கள் குடும்பத்தில் சர்க்கரை இல்லாத காப்பியை குடிப்பது வழக்கமாக இருக்கலாம். நாங்கள் குடிக்க மாட்டோம்" என்று எரிந்து விழுகிறான்.

"நான் சர்க்கரை போட்டிருக்கிறேன்." பதில் அமைதியான குரலில் வருகிறது.

"பின்னே சர்க்கரை எங்கே போய்விட்டது? ஏன் கதை அளக்கிறாய்.-?

அவள் உள்ளிருந்தே சொல்கிறாள். "சாஸரில் ஸ்பூன் வைத்திருக்கிறேன்."

"ஹ்ம்...." என்று உறுமிக்கொண்டு, மேலே பேச முடியாமல், அவன் ஸ்பூனைப் போட்டுக் காப்பியை கலக்கி விட்டு அருந்துகிறான். எவ்வளவு அருமையாக இருக்கிறது ! அவன் கோபமெல்லாம் மறைந்து விடுகிறது.

முன்னாலேயே காப்பியில் சர்க்கரை இருந்தது. ஆனால் கலக்கிய பிறகு காப்பி முழுவதும் இனிப்பாக மாறிற்று. ஞானம் நமக்குள்ளே இருக்கிறது. அதைப் புரிந்து கொண்டு விட்டால் வாழ்க்கை இனிமையாக ஆகிவிடும்.

- சுவாமி சின்மயானந்தா

**நாம் செய்யும் வேலையையே வழிபாடாகக் கருதிக் கொண்டால் வாழ்க்கையே தவமாக மாறிவிடும்.**

# ஏன் பஜனைப் பாடல்கள் பாட வேண்டும் ?

ஒவ்வோரு கணத்தையும், ஒவ்வொரு நாளையும் நாம் கொண்டாட வேண்டும். அப்படி கொண்டாடும்போது நாம் தெய்வத்தின் பக்கத்தில் செல்கிறோம். அதனால்தான் பண்டிகை நாட்களையும் விசேஷ தினங்களையும் கொண்டாடுகிறோம். கடவுள் என்பது முழுமையான பேரின்பம். பஜனை என்றால் பகிர்ந்து கொள்ளுதல். நாம் பேசும்போது அல்லது தனியே அமர்ந்து சிந்திக்கும்போது மனதில் பலவிதமான எண்ணங்கள் ஏற்படுகின்றன. ஆனால் நாம் பாடும்போது ஒரே விதமான வார்த்தைகள் தான் ஒருங்கிணைந்து எல்லோர் உள்ளத்திலும், உள் மனத்திலும் எதிரொலிக்கின்றன. ஒரே விதமான சப்தத்தை பகிர்ந்து கொள்கிறோம். எதைப் பகிர்ந்து கொள்கிறோம்? கடவுள் தன்மையைப்பகிர்ந்து கொள்கிறோம். கடவுள் தன்மை என்பது பேரானந்தம். நாம் பேரானந்தத்தில் இருக்கும் போது நாம் பகிர்ந்து கொள்கிறோம். நம் மனதில் அன்பு மலரும் போது பஜனை செய்கிறோம். நாம் குதூகலத்துடன் கொண்டாடும் போது, மகிழ்ச்சியாக இருக்கும்போது, நம் தியானம் ஆனந்தமும், சிரிப்பும் கொண்டதாக அமைகிறது. மனதில் இறுக்கம் இருக்காது. அப்போது நாம் பரம் பொருளுக்கு மிக மிக அருகில் இருப்போம். ஏனெனில் பரம்பொருள் எங்கும் பரந்து விரிந்து கொண்டாடியபடி இருக்கிறது. அப்பரம்பொருள் மிக அதிகமாகவும் விதம் விதமாகவும் இருப்பதை நீங்கள் பார்க்கலாம். உங்களுக்குத் தெரியுமா? மலைகள் யாவுமே ஒரு குதூகலம் என்று? சமஸ்கிருதத்தில் மலைகள் பர்வதம் என்றழைக்கப்படுகின்றன. பர்வதம் என்றால் சமமான பூமி குதூகலமான மகிழ்ச்சியில் எழுந்து நிற்பதாகப் பொருள். அந்த மகிழ்ச்சிக் கொண்டாட்டத்திற்குரிய மகளைத்தான் தெய்வத் தாயான பார்வதி என்று நாம் அழைக்கிறோம்.

நாம் குதூகலத்துடன் கொண்டாடும்போது சக்தி உருவாக்கப்படுகிறது. நாம் குறை கூறும் போது அல்லது முணுமுணுக்கும் போது சக்தி உருவாவதில்லை அதற்கு பதில் இராட்சதர்கள் உருவாகிறார்கள். இதைத் தான் மகிஷாசுரன் என்கிறோம். மகிஷாசுரன் என்பது முழுமையான—செயலற்ற—மிக எதிர்மறையான மிக சோர்ந்து போன ஓர் உணர்வு. மகிஷா என்பது எருமையைக் குறிக்கும். பார்வதி மகிஷாசுரனை அழித்தாள் எனக் கூறுவர். கொண்டாட்டத்தில் பிறக்கும் சக்தி எதிர்மறையான எல்லாவற்றையும் அழிக்கிறது. நாம் பாடும்போது நாம் குதூகலமாய்க் கொண்டாடுகிறோம். கொண்டாட்டத்துடன் பாடி அதில் நாம் மூழ்க வேண்டும். அதுதான் பாடுவதன் பலனாகும்.

பாடும்போது பாடல்களுக்கு இடையே சிறிது இடைவெளி விடவேண்டும். ஒருவர் பாடலை பாடி முதலில் பாட ஆரம்பித்தவுடன் மற்றவர் எல்லோரும் சேர்ந்து பின்பற்றிப் பாட வேண்டும். பாடும்போது, சுருதி மேலும் கீழுமாக ஏறி இறங்குவது பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. இதுவே பஜன் பாடுவதன் பலனாகும்.

> மகிழ்ச்சியாக இருக்கும்போது, நம் தியானம் ஆனந்தமும், சிரிப்பும் கொண்டதாக அமைகிறது. மனதில் இறுக்கம் இருக்காது. அப்போது நாம் பரம் பொருளுக்கு மிக மிக அருகில் இருப்போம்.

பாடல், சிரிப்பு, ஆடல், தியானம் இவற்றால் நம் வாழ்க்கையை கொண்டாட்டத்துடனும், புதுமைத் தன்மையுடனும் இருக்கச் செய்து வாழ வேண்டும். அதனால் தான் இந்தியாவில் வருடம் முழுவதும் ஏதேனும் கொண்டாட்டங்கள் இருந்த வண்ணம் உள்ளன. ஆனால் ஒரு சிலரே கொண்டாட்டத்தின் பலனை உண்மையாகவும் முழுமையாகவும் பெறுகின்றனர். கொண்டாடுவதன் மூலம் கவலைகளை மறந்து செயலாற்றலுடன் இருக்கும் தன்மை ஏற்படுகிறது.

உணவை உண்ணத் தொடங்குமுன், இறைவனுக்கு நிவேதனம் செய்துவிட்டே உண்ண வேண்டும்

# உணவும் குண இயல்பும்

நாம் உண்ணும் உணவைப் பொறுத்தே நமது குண இயல்புகள் அமைகின்றன என்று அறிஞர்கள் கூறுகின்றனர். இதோ நமது மகாபாரதக் கதையில் வரும் காட்சி இதை விளக்குகிறது.

> தீயவர்கள் போடும் உணவை சாப்பிட்டால் சாப்பிடுபவனின் மனமும் உடலும் கெட்டுப்போய்விடும் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

மகாபாரத யுத்தம் ஒருவழியாக முடிந்தது. தர்மபுத்திரர் சக்கரவர்த்தியாக முடிசூட்டப்பெற்றார்.

பீஷ்மர், சூரியன் வடதிசையை அடையும் உத்தராயண புண்ணிய காலத்தை எதிர்பார்த்துத் தம் உயிரை விடுவதற்காக, யுத்த பூமியில் அம்புப்படுக்கையின் மீது படுத்துக்கொண்டிருந்தார்.



பாண்டவர்களும் திரௌபதியும் சிறந்த தர்மாத்மாவான பீஷ்மரைக் கண்டு வணங்கினார்கள். யுதிஷ்டிரர் பீஷ்மரிடம் வர்ணம், ஆசிரமம், மக்களின் கடமை, அரசரின் கடமை போன்ற சில சிறந்த விஷயங்களைப் பற்றிய கேள்விகளைக் கேட்கக் கேட்க, பீஷ்மரும் எல்லாவற்றிற்கும் தக்க பதில்களைச் சொல்லிக் கொண்டு வந்தார்.

இவ்விதம் பீஷ்மர் யுதிஷ்டிரருக்குத் தர்மோபதேசம் செய்து கொண்டிருந்தபோது திடீரென்று திரௌபதி 'களுக்' என்று சிரித்துவிட்டாள்.

பீஷ்மர் தர்மோபதேசத்தைப் பாதியில் நிறுத்திவிட்டு, திரௌபதியை நோக்கி 'மகளே ! ஏனம்மா சிரித்தாய் ? என்று கேட்டார்.

திரௌபதிக்கு மிகவும் வெட்கமாகப் போய்விட்டது. எனவே தலையைத் தாழ்த்திக் கொண்டு அவள் 'என்னை மன்னித்துவிடுங்கள், பிதாமகரே ! என்றாள்.'

பிதாமகர் இந்தப் பதிலால் திருப்தி அடையவில்லை. அவர் தொடர்ந்தார். "குழந்தாய்" எந்தக் குலப்பெண்மணியும் பெரியவர்கள் கூடிய இடத்தில் சிரிக்கமாட்டார்கள். உன்னைப் போன்ற சிறந்த நடத்தையுடைய உத்தமப்பெண்கள் காரணமில்லாமல் பலர் முன்னிலையில் சிரிக்கமாட்டார்கள். நீயோ சிறந்த குணவதி. எனவே வெட்கப்படாமல் நீ சிரித்ததற்குக் காரணத்தைச் சொல்" என்றார்.

இதைக் கேட்ட திரௌபதிக்குக் கண்ணீர் திரையிட்டது. தன் இரு கைகளையும் கூப்பி "சுவாமி தாங்கள் இப்போது இவ்வளவு தர்மோபதேசம் செய்து கொண்டிருந்தீர்கள். திடீரென்று என் மனதில் ஒன்று தோன்றியது அதாவது, இன்று தர்மத்திற்கு இவ்வளவு சிறந்த விளக்கத்தைக் கொடுக்கும் இதே பிதாமகர், கௌரவர் சபையில் துச்சாதனன் என்னை மானபங்கப்படுத்த முயன்று கொண்டிருந்தபோது வாய் மூடிப்பேசாமல் மௌனமாகத் தானே பார்த்துக் கொண்டிருந்தார்? அந்த சமயத்தில் இப்போது இவ்வளவு தர்மம் பேசும் பீஷ்மாசாரியார் இந்த ஞானத்தை எல்லாம் எங்கே விட்டு வைத்திருந்தார்.

அல்லது ஒரு வேளை இவர் இந்த தர்ம விஷயங்களைப் பிறகு கற்றிருக்கலாம் என்று தீர்மானித்தேன். இதை நினைத்தவுடனே எனக்குச் சிரிப்பு வந்துவிட்டது என்னை மன்னித்துவிடுங்கள்" என்றாள்.

பிதாமகர் அமைதியாக அவளுக்குப் பதில் கூறினார். "குழந்தாய், உன் கேள்வி நியாயமானதுதான். இதில் உன்னை மன்னிப்பதற்கு என்னம்மா இருக்கிறது? துரியோதனின் சபையில் நான் இருந்த அந்தச் சமயத்திலேயே அற விஷயங்களைப் பற்றிய அறிவு எனக்கு இருக்கத்தான் செய்தது. ஆனால் துஷ்டனான துரியோதனனின் உணவை நான் அப்போது சாப்பிட்டு வந்தேன். அது காரணமாக என் அறிவு மழுங்கி நன்மை தீமைகளைப் பற்றி ஆலோசிக்க முடியாமல் போய் விட்டது. தீயவர்கள் போடும் உணவை சாப்பிட்டால் சாப்பிடுபவனின் மனமும் உடலும் கெட்டுப் போய் விடும் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஆனால் இப்போது அர்ஜுனன் போரில் என்மீது எய்திய அம்புகளால் என் உடலில் இருந்த எல்லா இரத்தமும் வெளியேறி விட்டது. கெட்ட உணவை சாப்பிட்டதினால் உண்டான இரத்தம் ஒரு சொட்டுவிடாமல் உடலை விட்டு வெளியேறியதனால் என் புத்தி தெளிந்துவிட்டது. அதனால் தற்போது இந்த அளவுக்கு தர்மத்தின் தத்துவங்களைச் சரியாக எடுத்துச் சொல்ல முடிந்தது" என்றார் பீஷ்மர்.

# பூஜையும் பயனும் !

உள்ளத்தில் உறைகின்ற இறைவனைப் பூஜிப்பதற்கு மிகவும் சிறந்தது மானச பூஜை, வழிபாடுகளுள் இதுவே மேலானது. ஆனால் அதைப் பரிபூரணமாகச் செய்ய எல்லோருக்கும் இயலுவதில்லை. சூக்ஷ்ம திருஷ்டியும், சூக்ஷ்ம பாவனையும் உண்டாகும் வரை ஸ்தூல வஸ்துகளின் உதவியை அதனாலேயே நாடுகிறோம். எண்களைக் கூட்டுவதற்குக் குழந்தைகளுக்கு உருவங்கள் அவசியமாக இருப்பதைப் போன்று, ஆத்ம சாதனத்தில் முதிர்ச்சி அடைவதற்கு முன் மூர்த்தி வழிபாடும், பூஜையும் சாதகர்களுக்குப் பெரிதும் பயன்படுகிறது. அவரவர் விரும்பியபடி வணங்குவதற்கு வீடுதோறும் பூஜை அறையும், அதனுள் வழிபடும் தெய்வத்தின் திருஉருவமும் இருப்பது அவசியம். பக்தன் ஒருவனுடைய இல்லத்தில் கோயிலறையே முதன்மையான ஸ்தானம் பெற்றிருக்கும்.

> எண்களைக் கூட்டுவதற்குக் குழந்தைகளுக்கு உருவங்கள் அவசியமாக இருப்பதைப் போன்று, ஆத்ம சாதனத்தில் முதிர்ச்சி அடைவதற்கு முன் மூர்த்தி வழிபாடும், பூஜையும் சாதகர்களுக்குப் பெரிதும் பயன்படுகின்றன.

மானச பூஜையைச் செய்தானதும், அது மனத்தில் நன்றாகப் படியும் பொருட்டு, திரும்பவும் ஒருமுறை பாகியத்தில் பக்தன் அதைச் செய்கிறான். சித்தமிசை குடிகொண்டுள்ள தெய்வம், தன்னெதிரே விக்கிரகத்தில் அல்லது படத்தில் ஆவிர்ப்பிக்கும்படி வேண்டுகிறான். இந்நிலையில் அவன் கண் விழித்துப் பார்க்கும்போது முன்னிலையில் உள்ள திரு உருவம் தெய்வத்தன்மையுடன் திகழ்கின்றது. தான் சேகரித்து வைத்துள்ள மஞ்சள் நீர், சந்தனம், புஷ்பம் முதலியவை இப்போது பயன்படுகின்றன. பயபக்தியுடன் பாத்யம் (பாதத்துக்கு நீர்) வார்க்கப்படுகிறது. சந்தனம், புஷ்பம், வில்வம், துளசி, அறுகு, அட்சதை முதலியவைகளில் ஏதேனும் ஐந்து திரவியங்கள் அடங்கப்பெற்ற அர்க்கியம் படைக்கப்படுகிறது. பின்பு மனத்துக்கு உகந்தபடி அபிஷேகம், அலங்காரம், தூபதீபம், நைவேத்தியம், ஆசமனம், அர்ச்சனை, ஸ்தோத்திரம் முதலியவைகளைச் செய்யும்போது பாகிய பூஜை முற்றுப் பெறுகிறது.

பாகிய பூஜையில் கையாளப்படும் சடங்குகள் எல்லாமே ஆத்மசாதனத்தின் பல்வேறு இயல்புகளை விளக்குபவைகளாகவே அமைந்துள்ளன. கடவுளுக்கு இவையெல்லாம் தேவையா என்ற கேள்விக்கே இடம் இல்லை. ஏனெனில் இவையாவும் சாதகனுக்குப் பயன்படுகின்றன. அவன் ஈசனை அடைவதற்குப் பயன்படுபவைகளாய் அமைந்தவை இவை. உயிர்களை இறைவன் மாட்டு இட்டுக் கொண்டு போதலே இயற்கையின் தொழில். ஆதலால் இயற்கையைக் கடவுள் வழிபாட்டுக்கு உபயோகிப்பதே, மனிதன் அதைக் கொண்டு செய்யும் அருள் காரியமாகும். அதனாலேயே இயற்கை தரும் பொருட்களைப் பூஜைக்கு உபயோகிக்கிறோம்.

உணவை ஒருவனுக்காக மற்றவன் உட்கொள்வதில் பயனில்லை. உடலைப் பேண விரும்பும் ஒவ்வொருவனும் தனக்குத்தானே போஜனம் பண்ண வேண்டும். கல்வியும் அத்தகையதே. அதை வேண்டுபவன் தானே முயன்று கற்க வேண்டும். உதவி புரிவதோடு பிறருடைய வேலை நின்று விடுகிறது. ஆத்மசாதனம் இன்னும் மேலானது. சுயப்பிரயத்தனத்தாலன்றி அது அமையாது. பூஜாதத்துவ இயல்புக்கு ஏற்றவாறு அதைத்தானே செய்து கொள்ள வேண்டும். அரைகுறையாகவேனும் தானே சாதனத்தைச் செய்ய முயல்பவனே முன்னேற்றமடைகிறான்.

## உட்பொருள் !

குத்துவிளக்கு எரியும்போது திரி எரிகிறது என்பது எல்லோரின் கண்களுக்கும் தெரியும். அது வெளித்தோற்றம். ஆனால், அது கீழிருந்து வரும் எண்ணெய் மூலமாகத்தான் எரிகிறது என்று உணர வேண்டும். அது நாம் உணர வேண்டிய உட்பொருள். வாழ்க்கையில் வெளித்தோற்றத்துக்கு முக்கியத்துவம் அளிக்காமல், உட்பொருளுக்குத்தான் முதன்மை தரவேண்டும். அப்போதுதான் நிலையான இன்பத்தைப் பெற முடியும்.

– சுவாமி வீரேசுவரானந்தா

கசப்பைத் தரக்கூடிய உண்மையையும், இனிமையாகச் சொல்வதற்கு மனப்பயிற்சி அவசியம்.

## ஜபமாலை

ஜபம் செய்யப் பயன்படும் மாலையில் 108 மணிகள் இருக்கின்றன. அஷ்டோத்திரம் போல 108 தடவை சொல்ல வேண்டிய மந்திரங்களுக்கு இது மிகவும் பயன்படும். மோதிர விரலையும், கட்டைவிரலையும் வைத்து ஜபமணிகளை ஒவ்வொன்றாக உருட்ட வேண்டும். நடுவிரலால் ஒவ்வொரு தடவையும் அடுத்த மணியைத் தள்ளிக்கொண்டு வரவேண்டும். சுட்டுவிரல் இதற்குப் பயன்படுவதில்லை. ஏன்? அது பிறர்மீது உள்ள குற்றங்களைச் சுட்டிக்காட்டுகிறது. பிறரைப் பயமுறுத்த, அந்த விரலைத்தான் ஆட்டிக்காட்டுகிறோம். ஆகையால் அது ஜபம் செய்யப் பயன்படாது.

மந்திரம் என்பது கடவுளை நினைக்க உதவுவது. அதைச் சொல்லும்போதே அவருடைய உருவத்தை நீங்கள் எண்ணிக் கொள்ளலாம். இதில் இரகசியம் ஏதும் இல்லை. ஆனால், குருவின் மூலம் உபதேசமாக அதைப் பெறும்போது அதற்கு ஜீவகளை வந்துவிடுகிறது.

மேரு–மணி என்பது 108 தடவை சொல்லி முடிக்கும் போது மீண்டும் வரும். இது மாலையில் பிரதானமான மணியாகும். இதை விரலால் உருட்டக் கூடாது. 107–வது மந்திரம் சொன்ன மணியைக் கொண்டே அடுத்ததையும் சொல்லிவிட்டு, மேருமணியைத் தொடாமலே 109–வது மந்தித்துக்குப் போய்விடுங்கள். ஒரு நாளைக்கு இருபது மாலைகள் வரை ஜபம் செய்யலாம். ஒரு தடவை காலையிலும் ஒரு தடவை மாலையிலும் செய்வது முறை.

மந்திரம் என்பது கடவுளை நினைக்க உதவுவது. அதைச் சொல்லும்போதே அவருடைய உருவத்தை நீங்கள் எண்ணிக்கொள்ளலாம். இதில் இரகசியம் ஏதும் இல்லை. ஆனால், குருவின் மூலம் உபதேசமாக அதைப் பெறும்போது அதற்கு ஜீவகளை வந்துவிடுகிறது. ஞானியான ஆசான் அதன் மூலம் தனது சீடனுக்குத் தனது ஆன்மிக சக்திகளையே மாற்றிக் கொடுக்கிறான். ஆகையால் மந்திரத்தைக் குருநாதர் மூலம் பெறுவதுதான் சிறப்பு.

மந்திரத்தைச் சொல்லப் பிரதீகா (விக்கிரகம்), பிரதிமா (வடிவம்) இரண்டில் ஒன்றாவது ஆரம்பத்தில் தேவை. முதன் முதலில் கணக்குப் பாடம் கற்றுக் கொள்ளும்போது வாய்ப்பாடு தேவை, அப்புறம் படிப்படியாக முன்னேறியபின், அது இல்லாமலே கணக்குப் போட்டு விடுகிறோம். மந்திரங்கள் மூலம் மானசீகமான இஷ்ட தெய்வத்தை நினைத்து வழிபடப் பழகியபின் இவை தேவைப்படாது.

மனம் நெகிழ்ந்து படிந்து தியானத்தில் ஈடுபட ஜபமாலை உதவுகிறது. மந்திரத்தில் மனத்தை நிறுத்துவதற்கு அதை உருட்டுவது உபயோகமாகிறது. மனம் மந்திரத்தை விட்டு நழுவும்போது ஜபமணியை உருட்டுவதும் தானாகவே நின்றுவிடும். அப்போது மீண்டும் மனத்தைக் கட்டி நிறுத்தி மந்திரத்தைத் தொடர முயலுவோம். இந்த முயற்சிக்கு ஜபமணி காவலாளியைப்போல உதவுகிறது !.

## சத்வ குணம்

உடல் நலம் நன்கு அமையும்போது சுகமாக இருக்கும் பல விஷயங்கள், ஆரோக்கியம் குலையும்போது வெறுப்பையே தருகின்றன. எந்த நிலையிலும் நிலையான இன்பத்தையே அனுபவிக்கும் மனப்பக்குவம் இருப்பதே மேல் அல்லவா? இதை அடைவது எவ்வாறு? இதையே மெய்ஞ்ஞான உணர்வு நமக்குப் பாடமாகப் புகட்டுகிறது.

படிப்படியாக நாம் மிருகத்திலிருந்து மனிதனாக மாறினோம். இந்த மாறுதல் வெளித்தோற்றத்தில் மட்டும் இருந்து பயன் இல்லை. நம்முடைய உள்ளம் மிருக உணர்வுகளிலிருந்து விடுபட வேண்டும். மனத்தில் சத்துவகுணம் நிறைந்தால் இந்த மேன்மையான. பக்குவமான உணர்வு நம்முடைய மனத்தில் நிறைகிறது. மனிதன் மிருகமாக இருந்தான் என்ற உணர்வு மறைந்து, மனிதன் தெய்வமாக மாறினான் என்ற மனநிலையை அடைய நாம் முயலவேண்டும்.

## சுகமும் துக்கமும் !

உலகத்தில் உள்ள எல்லோருமே நல்ல முடிவையும், சுகத்தையும் விரும்புகிறார்கள். தோல்வியையோ கஷ்டங்களையோ யாருமே விரும்புவதில்லை. அதனால் முயற்சியில் ஈடுபடும் ஒவ்வொருவனும் சுகம், வெற்றி ஆகிய நல்ல பலன்களுக்காகவே பாடுபடுகிறான். ஆயினும் எல்லோருக்கும் இந்தப் பலன்கள் கிடைத்து விடுவதில்லை. அப்படி ஏமாற்றம் அடையும்போது மேலும் நல்ல முயற்சிகளில் ஈடுபடும் மனோபாவத்தையே அவன் இழந்து விடுகிறான். நல்ல எண்ணங்கள் நல்ல முயற்சிகள் ஆகியவற்றில் உள்ள ஆர்வத்தையே பறிகொடுத்து விடுகிறான். ஓரளவு தன்னம்பிக்கையிலும் அவன் தடுமாற்றம் கொள்கிறான்.

அப்போது 'இந்தப் பலன்கள் நான் இப்போது செய்த முயற்சிகளால் மட்டும் கிடைத்தவை அல்ல. நான் இப்போது அனுபவிக்கும் துன்பத்துக்கு முற்பிறவியில் நான் செய்த கெட்ட காரியங்களே காரணம். இதைப்போன்ற துன்பங்களை நான் அடுத்த பிறவியிலாவது அனுபவிக்காமல் இருக்க வேண்டுமானால், நான் நல்லெண்ணங்களுடன், நல்ல காரியங்களையே செய்ய வேண்டும்' என்று அவன் நினைத்தால், தொடர்ந்து நல்லவைகளையே செய்யும் மனப்பாங்கினை வளர்த்துக் கொள்கிறான். தன்னம்பிக்கையும் உறுதிப்படுகிறது. இது மிகச் சிறந்த ஒரு மனோதத்துவ சிகிச்சையாகும்.

இரண்டாவதாகச் செய்ய வேண்டியது,' என்னுடைய சிரமங்களுக்கு நான் பிறரைக் குற்றம் சொல்லுவானேன்.? முயற்சியில் ஈடுபட வேண்டியது மட்டுமே என்னுடைய பொறுப்பு. அதனால் கிடைக்கும் பலாபலன்கள் இறைவனையே சார்ந்தவை. அதை முடிவு செய்வது நான் அல்ல' என்று பக்தி மனப்பான்மையுடன் கடவுளிடம் சரண் அடைந்துவிடுவது. இப்படிச் செய்வதனால் முடிவில் கிடைக்கும் சுகமோ துக்கமோ, ஆரம்பத்தில் ஒருவன் செய்யும் முயற்சியின் திறனைப் பாதிப்பதில்லை. இதுவும் இன்னொரு சிறந்த மனோதத்துவ சிகிச்சையாகும்.

இந்த இரு முறைகளும் இந்துமதம் நாம் வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கும், நன்மைகளையே செய்வதற்கும், நல்லவராக வாழ்ந்து சமுகத்துக்கு வளம் சேர்ப்பதற்கும் உதவுகின்றன.

- சுவாமி பூர்ணானந்த தீர்த்தர்.

## செய்யும் தொழில் !

நாம் செய்யும் பணியில் வித்தியாசம் பாராட்ட வேண்டியதில்லை. எந்தப் பணியையும் நாம் கடமை உணர்ச்சியுடன் செய்ய வேண்டியது தான் முக்கியம். அதுவே இறைவனுக்கு உகந்தது. எந்த வேலையைச் செய்வது என்பதை விட, எந்த வேலையை அன்புள்ளத்துடன், தியாகஉணர்வுடன் செய்கிறோம், என்பதுதான் முக்கியம். உலகத்தில் புகழ்பெற்ற ஆராய்ச்சியாளர்கள், விஞ்ஞானிகள், தத்துவமேதைகள், பக்திமான்கள் ஆகியோரின் வாழ்க்கை இதையே நமக்கு எடுத்துக்காட்டுகிறது. இந்தப் பணியைச் செய்ய நம்மை ஆளாக்கிவிட்டவன் இறைவன் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அப்போது 'நான் செய்தேன்' என்ற வீண் பெருமையோ, அகங்காரமோ நம்மை ஆட்டிப்படைக்காது.

நாம் எடுத்துக் கொண்ட பணியின் வெற்றி-தோல்விகள் நம்மைப் பெரிதும் பாதிக்கும். இதனால் சலிப்பு உண்டாகும்; நம்முடைய திறமையும் குன்றிப் போகும். இதைத் தவிர்க்க நாம் இதை இறைவனுக்கே அர்ப்பணித்து 'நல்லவை அல்லவை நாராயணனுக்கே' என்ற மனப்பான்மையுடன் ஈடுபட வேண்டும். அப்போது அதன் வெற்றியில் நாம் இறுமாப்பு அடையமாட்டோம்; அதன் தோல்வியில் மனம் தளர மாட்டோம். வேலையைச் செய்யும்போதும் மனம் அமைதியுடன் இருக்கும்.

நாம் செய்யும் பணி யாருக்காக இருந்தாலும், அது இறைவனுக்கு அர்ப்பணிக்கப்படுகிறது என்ற நினைவு நமக்கு இருக்கவேண்டும். அப்போது நாம் நம்முடன் சேர்ந்து பணிபுரிபவர்களையும் சமநிலையில் வைத்துப் பழகும்பண்பைப் பெறுவோம். பொறாமை, கோபம், போட்டியில் வரும் வெறுப்பு ஆகியவை நம்மைப் பாதிக்காது. பக்திப்பணியில் பலரும் தாமாகச் சேருவதைப் போல எல்லோரும் ஒன்றி உழைப்பை நல்கினால் விளைவுகள் கூட்டு மொத்தமாகக் கிடைக்கும். எல்லோருக்கும் அதில் மகிழ்ச்சியும் மனநிறைவும் உண்டாகும்.

நாம் செய்யும் பணி எதுவானாலும் அதில் நல்லொழுக்கம், கொள்கையில் பிடிப்பு, மனப்பூர்வமான ஈடுபாடு ஆகியவற்றைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். பக்திமார்க்கத்துக்கு இவை மிகமுக்கியம். நாம் செய்யும் நற்பணிக்கும் இவை மிகவும் முக்கியமானவை. இப்படி நாம் ஈடுபட்டுச் செய்யும் ஒவ்வொரு பணியிலும் நமக்குப் பூரணமான நன்மை கிடைக்கும் என்ற நம்பிக்கை நமக்கு இருக்க வேண்டும்

- சுவாமி சின்மயானந்தர்

## ஏழாவது ஜாடி !

ஏழை சவரத்தொழிலாளி ஒருவனுக்கு அவனுடைய மனைவிக்கு நகைகள் போட்டுப் பார்க்க வேண்டுமென்று ஓர் ஆசை. காட்டு வழியாக நடந்து போனபோது ஒரு மரத்தடியில் அமர்ந்து கடவுளை வேண்டினான். "பயப்படாதே! உனக்கு ஏழு ஜாடிகளில் பொற்காசு கிடைக்கும். போதுமா.?" என்று ஒரு குரல் கேட்டது. "ஏழு ஜாடிகளில் பொற்காசுகளா!? வேண்டும்! வேண்டும்!" என்று கூச்சலிட்டான் அந்த மனிதன். அந்தக் குரல் நின்று விட்டது. வீட்டுக்கு ஓடிப்போய்ப் பார்த்தான். அங்கே ஏழு ஜாடிகள் தோன்றி இருந்தன. ஆறு ஜாடிகளில் நிறையப் பொற்காசுகள் இருந்தன. ஏழாவது ஜாடி மட்டும் பாதி நிரம்பி, இருந்தது......

"ஏழாவது ஜாடியையும் எப்படியாவது பணம் சம்பாதித்து நிரப்பி விடுவோம். அப்புறம் உனக்கு நிறைய நகைகள் செய்து போடலாம் !" என்றான் அந்த ஏழை. அவளும் ஒப்புக்கொண்டாள். இருவரும் பாடுபட்டுப் பணம் சம்பாதிக்கத் தொடங்கினார்கள். அப்படிக் கிடைத்த பணத்தை உணவுக்கோ, உடைக்கோ பயன்படுத்தவில்லை. பத்திரமாகச் சேமித்து பொற்காசுகளாக மாற்றி அந்த ஜாடியில் போடத் தொடங்கினார்கள்.

சில மாதங்கள் கழிந்து விட்டன. ஏழாவது ஜாடியில் புதிய பொற்காசுகள் கொஞ்சம் மட்டுமே சேர்ந்திருந்தன. ஏழை உடல் இளைத்து மெலிந்து விட்டான். அவனை வீட்டுக்கு வரவழைத்து வழக்கமாக சவரம் செய்து கொள்ளும் ஓர் பிரபு அவனை "என்னப்பா ஏன் இப்படி இளைத்துப் போய் விட்டாய்?" என்று கேட்டான். சவரத் தொழிலாளி நடந்ததைக் கூறினான்.

அந்தப் பிரபு நிறையப் படித்தவன் : விவேகம் உள்ளவன். அவனைப் பார்த்து, "அப்பா! அந்த ஏழாவது ஜாடி நிரம்பவே நிரம்பாது ! ஆசை வலையில் நீ நன்றாக மாட்டிக் கொண்டாய். ஆறு ஜாடி பொற்காசுகள் இருந்தும் அதைச் செலவழிக்க உனக்கு மனம் வரவில்லை. ஏழாவது ஜாடியை நிரப்ப உனக்கு நியாயமாகக் கிடைத்த பணத்தை தூக்கிக் கொடுத்து விட்டாய்! இதற்கு முன் உனக்கு வாழ்க்கையில் கிடைத்த சுகமும் போய் விட்டது பார்த்தாயா? இறைவனை வேண்டிக்கொண்டு இந்த ஜாடிகளைத் திருப்பி விட்டுவிடு ! அப்போது தான் நீ தப்பிக்கலாம் !" என்று சொன்னான் அந்தப் பிரபு.

அந்த ஏழைக்கு அறிவு பிறந்தது. காட்டுக்குப் போய் இறைவனை வேண்டிக் கொண்டான். "எனக்குப் பொற்காசுகள் வேண்டாம். எல்லா ஜாடிகளையும் எடுத்துக்கொள். எனக்கு மன அமைதியை மட்டும் கொடு!" என்று வாய்விட்டு அழுது முறையிட்டுவிட்டு வீடு திரும்பினான். ஜாடிகள் மாயமாக மறைந்து விட்டன. ஆனால் ஏழையின் மனம் போதும் என்ற உள்ள நிறைவால் நிறைந்தது!.

- பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர்.

> "ஏழாவது ஜாடியையும் எப்படியாவது பணம் சம்பாதித்து நிரப்பி விடுவோம். அப்புறம் உனக்கு நிறைய நகைகள் செய்து போடலாம் !"

### சின் முத்திரையின் தத்துவம்

கட்டை விரல் என்பது கடவுள், ஆள்காட்டி விரல் என்பது ஜீவன், மற்ற மூன்று விரல்கள் என்பன மும்மலங்கள்.

ஆள்காட்டி விரல் மற்ற மூன்று விரல்களோடு சேர்ந்திருக்கும் வரை கட்டை விரல் தூரவே இருக்கும். அதாவது, ஜீவன் மலங்களோடு கூடியிருக்கும் வரைக்கும் கடவுள் தூரவே இருப்பார்.

இதில் ஆள்காட்டி விரல் என்ற ஜீவன் மூன்று மலங்களாகிய மூன்று விரல்களை விட்டு விலகி, கட்டை விரல் என்ற கடவுளை நோக்கிப் புறப்பட்டால், கடவுள் அப்பேறுபட்டவர்களை எதிர்கொண்டழைக்கிறார் என்பது போலக் கட்டை விரல் அப்படியே ஆள்காட்டி விரலை நோக்கிப் போகும். இதுதான் சின் முத்திரையின் தத்துவம்.

ஆதாரம் - இந்துமத தத்துவம்

# எல்லாம் பகவான் செயல் !

'எல்லாம் பகவான் செயல்!' இதை நாம் எளிதாகச் சொல்லுகிறோம். ஆனால் இதைச் சொல்வதே ஒரு மந்திரிக்கு விபரீதமாக முடிந்தது. அந்த நாட்டுப் பிரஜைகள் அந்த மந்திரியிடம் வந்து தங்கள் குறையை முறையிடுவார்கள். சிலவற்றை அவர் தீர்த்து வைத்தார். சிலவற்றைத் தீர்க்க முடியவில்லை. அவர்கள் கேட்டபோது, "என்ன செய்வது ? எல்லாம் பகவான் செயல்!" என்றார் மந்திரி.

குடிமக்கள் பொறுமை இழந்து போனார்கள். அரசனின் அரண்மனை வாசலில் இருந்த ஆராய்ச்சி மணியை அடித்தார்கள். அரசன் வெளியே வந்து விசாரித்தான். மந்திரி சொன்னதை அரசனிடம் கூறி, "இப்படிச் சொன்னால் நாங்கள் என்ன செய்வது? தாங்கள் தான் வழிகாட்ட வேண்டும்" என்று முறையிட்டார்கள் குடிமக்கள்.

அரசனுக்கு கோபம் வந்து விட்டது. அவர்களை அனுப்பிவிட்டு மந்திரியை வரவழைத்தான். மந்திரியுடன் பேசிக்கொண்டே பழம் ஒன்றை நறுக்கிக் கொண்டிருந்த அரசன் விரலை அறுத்துக் கொண்டு விட்டான். "பார்த்தீர்களா? ஓரளவுதான் எதுவும் நம் கையில் இருக்கிறது. அரசரான தாங்கள் பழத்தை நறுக்க முயல்வானேன்? விரலை அறுத்துக் கொள்வானேன்? எல்லாம் பகவான் செயல்!" என்றார் மந்திரி.

அரசனுக்கு மிகுந்த கோபம் உண்டாயிற்று. மந்திரியைச் சிறையில் அடைக்க உத்தரவிட்டான். அவன் மனம் சமாதானம் அடையவில்லை. மன அமைதியை நாடி அவன் தனியாகவே குதிரை மீது ஏறிக் காட்டுக்கு வேட்டையாடப் புறப்பட்டுச் சென்றான். அங்கே காளி பக்தர்கள் சிலர் அவனை மறித்துப் பிடித்துக் கொண்டார்கள். காளிக்குப் பலி கொடுக்க அரசனைக் கைகளையும் காலையும் கட்டித் தூக்கிக் கொண்டு போனார்கள்.

நரபலி கொடுக்கும்போது, அந்த மனிதனிடம் எந்தவிதக் குறையும் இல்லையா என்று பார்ப்பது வழக்கம். அரசனை அவ்வாறு சோதித்தபோது ஒரு விரல் வெட்டுப் பட்டிருந்தது. குறையுள்ளவன் என்று பலி கொடுக்காமல் அரசனை விடுவித்து விட்டார்கள். அரசன் உயிர் தப்பித்து நாடு திரும்பினான். மந்திரியைச் சிறையிலிருந்து விடுவித்து அழைத்து வந்து, "நீங்கள் சொன்னது உண்மைதான். எல்லாம் பகவான் செயல். அன்று விரலை வெட்டிக்கொண்டேனோ, இப்போது உயிர் பிழைத்தேனோ! இதை அறியாமல் உங்களைச் சிறையில் வைத்தேனே?" என்று வருந்தினான் அரசன்.

"அரசே! என்னைச் சிறையில் நீங்கள் வைக்கவில்லை. பகவான் தான் வைத்துப் பூட்டினார். இல்லாவிட்டால், இன்று உங்களுடன் காட்டுக்கு வந்திருப்பேன். குறையில்லாமல் இருந்த என்னைப் பலி கொடுத்திருப்பார்கள்! இதுவும் பகவான் செயல்தான்!" என்றார் அந்த மந்திரி.

பாபா முக்தானந்தா.

கொழும்புத் தமிழ்ச் சங்கம் நூலகம்

## கற்பூர ஆரத்தி தத்துவம்

ஆத்மா பரமாத்மாவோடு கலப்பதைக் குறிக்கும். கற்பூரம் வெள்ளையானது. அது சுத்த சத்துவ குணமுள்ள ஆத்மாவைக் குறிக்கும். கற்பூரத்தை ஏற்றியவுடன் அது தீபம் போல எரிவது, ஞானாக்கினியால் மலம் நீங்கப் பெற்ற ஆன்மாவானது சிவசரணம் பெற்று நிற்பதைக் காட்டும். கற்பூரம் இறுதியில் ஒன்றுமின்றிக் கரைந்து போவது போல ஆன்மாவானது சரீரங்களெல்லாம் நீங்கி இறைவனோடு ஒன்றுபடும். இதைக் காட்டுவதே கற்பூர தீபாராதனையின் தத்துவமாகும்.

# வாழ்ந்து பார்க்கலாம் வாருங்கள் !

துன்பங்களும் துயரங்களும் உண்டாகின்றன என்று பலர் நினைக்கின்றார்கள்.

அப்படி இல்லை.

கோபம், பயம், துன்பம், போன்ற துக்கரமான உணர்ச்சிக்குழப்பங்கள் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்பதே முக்கியமானது.

உங்களுக்கும் மற்றவர்களுக்கும் ஏற்படும் துன்பங்களுக்கு ஆரம்பக் காரணம் நீங்களாக இருக்க வேண்டியதில்லை. ஆனால் நீங்கள் எப்படி உணருகிறீர்கள் என்பதைப் பொறுத்தே வெறுப்பான உணர்ச்சிக் கொந்தளிப்புகள் உண்டாகின்றன.

'நம் நடத்தையைக் கட்டுப்படுத்தி நமது உணர்வுகளை அடக்கலாம்' என்பார் புகழ்பெற்ற மனோத்துவ நிபுணர் வில்லியம் ஜேம்ஸ்.

துன்பங்களையும் துயரங்களையும் நீக்குவதற்கு எதிர்த் தாக்குதலும் பயன் தராது. நமது அறிவுக்கு எட்டும் ஒவ்வொரு கருத்து, நிலைமை, நிகழ்ச்சிகளுக்கு நாம் நான்கு வகையில் எதிர்த்தாக்கு செய்கிறோம்.

(1) சாதாரணமாக எதிர்த்தாக்குதலில் இருந்து பயங்கரமான எதிர்த் தாக்குதல் வரை சென்று நமது இதயம் பலவீனமாகி மரணம் அடையும் வரை சிலர் நடந்து கொள்கிறார்கள்.

(2) சிலர், மற்றவர்கள் நடந்து கொள்வதற்கு மாறாகச் சமயத்தில் எதிர்த் தாக்குதல் செய்வதுண்டு. உதாரணமாக மற்றவர்களுக்குத் துன்பம் வந்தபோது சிரிப்பது, உதவி கேட்டால் ஏளனம் செய்வது. எச்சரிக்கைகளை உதாசீனம் செய்வது.

(3) சிலசமயம் ஒன்றுமே செய்யாமல் இருந்துவிடுவது.

(4) அமைதியான மனத்தால் ஆராய்ந்து செயல் படுவது.

ஒன்றுமே சொல்லாமல் அமைதியாக இருந்தாலும், அமைதியாகச் சிந்தித்தாலும், செயல் பட்டாலும் வெற்றி நிச்சயம்.

விபரீதமான முறையில், பகுத்தறியாமல், பைத்தியக்காரனைப் போல எதிர்வாதம் செய்தால் வைத்தியம் செய்யவேண்டியது தான்.

'நடந்ததைப் பற்றிக் கூட கவலை இல்லை. என்ன நடந்தது என்பதைப் பற்றிய எண்ணமே மக்களை உறுத்துகிறது' என்கிறார் பிரான்சு நாட்டு தத்துவஞானி மான்டேன்.

அதிகமாக உணர்ச்சிவசப்படாதீர்கள். இதனால் அதிகம் எதிர்வாதம் செய்வதைத் தவிர்க்கலாம். இது வாழ்க்கை முழுவதும் பலன் அளிக்கும்.

மக்கள், பொருள்கள், நிலைமைகள் எதுவும் சரியானதாக இருப்பதில்லை என்று புரிந்துகொண்டால் அதிகம் செயலாக்கம் இல்லாமல் தவிர்க்கலாம்.

நீங்கள் அதிகம் உணர்ச்சிவசப் படுகிறீர்களா?

உங்கள் நுண்ணிய உணர்வுகள் வெகு சீக்கிரம் பாதிக்கப்படுகின்றனவா?

தவறாக நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றியும் நீங்கள் துடிக்கிறீர்களா.?

சமுகத்தில் நடக்கும் சாதாரண நிகழ்ச்சிகள் உங்கள் மனத்தில் ரணத்தையும், வலியையும் ஏற்படுத்துகின்றனவா?



உலகம் உங்கள் விருப்பத்திற்கு ஏற்றவாறோ உங்களுக்கு மகிழ்ச்சி தருவதற்காகவோ அமைக்கப்படவில்லை.

குறைகள் மிகுந்த இந்த உலகத்தைத் திருத்துவது உங்கள் கடமையா என்ன? அல்லது சரியாக இருக்கவேண்டும் என்று கேட்பது முறையா?

மற்றவர்கள் குறைகளை ஏற்பீர்களேயானால் உங்கள் குறைகளையும் அவர்கள் அங்கீகரிப்பார்கள்.

குறைகளை மிகவும் அதிகமாக எதிர்க்காதீர்கள். அவைகள் அடிக்கடி நிகழ்கின்றன.

சுயநலவாதிகள் நிறைந்த இந்தக் கூட்டத்தில் அவர்களுக்குத் தெரியாமலேயே உங்கள் மீது இடிக்கலாம். அது வேண்டுமென்றே செய்த தவறன்று. அதைப் பொருட்படுத்தாதீர்கள்.

அவர்கள் பிரச்சினையில் அவர்கள் கவலை. ஆகவே உங்கள் உணர்ச்சிகளை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை.

இதைப் புரிந்து கொள்ளுங்கள்.

குறைகளைக் கண்டு பொங்கி எழுந்தால் நீங்கள் இருக்குமிடம் தெரியாமலே போய்விடுவீர்கள். அல்லது உங்களுக்கு ஆபத்தே காத்திருக்கும்.

ரோமானிய சக்கரவர்த்திகளிலே மிகச் சிறந்த அறிஞரான மார்க்கஸ் அரேலியஸ் தன்னுடைய குறிப்பில் எழுதி வைத்திருக்கிறார் -"நான் இன்று அதிகம் பேசும் மக்களை சுயநலவாதிகளை, தற்பெருமைக்காரர்களை, நன்றி கெட்டவர்களைச் சந்திக்கப்போகிறேன். உலகில் இப்படிப் பட்டவர்கள் இல்லாமல் இருக்காது. ஆகவே எனக்கு ஆச்சரியமோ, அதிர்ச்சியோ இல்லை".

அமைதியான மனம் இருந்தால் யாரும் எதுவும் உங்களுக்குத் தொல்லை தர முடியாது.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகு அப்படிப்பட்ட மனிதர்களை நீங்கள் சந்திக்கிறீர்கள். அவர்களின் குறைகளைக் கண்டு அதிகம் கலங்காதீர்கள். கோபம், துக்கம், எதிர்ப்பு போன்ற குணங்களோடு எதிர்த்தாக்கம் செய்யாதீர்கள்.

அப்படிப்பட்ட மனிதர்கள் இருக்கிறார்கள், இருந்தார்கள், இனியும் இருப்பார்கள்.

மனித இனத்தின் தொடக்க காலத்தில் இருந்தே வந்து கொண்டிருக்கும் இந்தக் குணங்களை யாரும் மாற்ற முடியவில்லை. அதைச் செய்வதற்கு இப்போது நீங்கள் படைக்கப்படவில்லை.

அமைதியாக இருங்கள். குறைகளைக் கண்டு அதிகம் வாதம் செய்யாதீர்கள். அவற்றைக் கண்டு துவண்டு விடாதீர்கள். அவற்றை மறுப்பதற்காக எதிர்வாதம் செய்யாதீர்கள். மாற்ற முடியாதவற்றை ஏற்றுக்கொள்ளப் பழகி கொள்ளுங்கள்.

அமைதியான மனத்துடன் இருங்கள்.

நேரமில்லாத இந்த உலகில் சுயநலமிக்கவர்கள்தாம் அதிகம். நடுநிலையாக இருப்பதற்கு அவர்களுக்கு நேரமில்லை.

ஆகவே விரோதத்தால் நீங்கள் உணர்ச்சி வசப்படுவீர்களேயானால் உங்களுக்கு உண்மையாகவோ கற்பனையாகவோ விரோதம் பாராட்டப் பல நிகழ்ச்சிகள் உண்டு. அதனால் நீங்கள் ஆத்திரம் அடையக்கூடும்.

இது நல்லதன்று. இதனால் தீமையே அதிகம்.

விரோதத்தையும் கோபத்தையும் அடக்கி வைத்திருந்தாலும் ஆபத்து. வெளியே, ஆத்திரம் தீர்ப்பதும் தீமையே. அது உங்களை உணர்ச்சி பூர்வமாய், உடல், மன, ஆத்மார்த்தமாய், அழித்துவிடுகிறது. இதனால் நஷ்டம் அதிகம்.

உங்களுக்கு மரியாதை குறைகிறது. உங்களை யாரும் மதிப்பதில்லை.

விரோதத்தாலும் ஆத்திரத்தாலும் இரைச்சல் போடுகிறவர்களை நரம்புத்தளர்ச்சி உள்ளவர்கள் என்று ஒதுக்கி விடுகிறார்கள்.

'கோபம் கோழைத்தனம். அது மனப் பாதிப்பையும் பதைபதைப்பையும் காட்டும்' என்கிறார் தத்துவஞானி மார்கஸ் அரேலியஸ்.

நீங்கள் அதிகம் உணர்ச்சிவசப் படுகிறீர்களா?

உங்கள் நுண்ணிய உணர்வுகள் வெகு சீக்கிரம் பாதிக்கப்படுகின்றனவா?

தவறாக நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றியும் நீங்கள் துடிக்கிறீர்களா?

சமுகத்தில் நடக்கும் சாதாரண நிகழ்ச்சிகள் உங்கள் மனத்தில் ரணத்தையும், வலியையும் ஏற்படுத்துகின்றனவா?

அதைப் பற்றியே நினைத்துக் கொண்டு வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுகிறீர்களா?

வேண்டாம் !

உணர்ச்சிகளை இறுக்கிக் கொள்ளுங்கள். உலகில் நடக்கும் நிகழ்ச்சிகளைக் கண்டு சிறிய விஷயங்களானாலும் அதிக பாதிப்புகளுக்கு உள்ளாகாதீர்கள்.

இரண்டு விதமான முறைகளில் நிச்சயம் பலன் காணலாம்.

(1) பொருட்படுத்தாதீர்கள் உங்களைப் பற்றி அவதூறாகவோ, மிக மட்டமாகவோ யார் பேசினாலும் அதைக் காதில் வாங்கிக் கொள்ளாதீர்கள். அதைக்கண்டு கொள்ளாமல் விட்டுவிடுங்கள்.

'எனக்குப் பிடிக்காத மனிதர்களைப் பற்றி நினைத்துப் பார்ப்பதே கிடையாது' என்பார் ஜெனரல் ஐசன் ஹோவர். ஆனால் அவர் போன்று நீங்கள் இருக்க வேண்டாம். ஆனால் கொதிப்படையாமல் அமைதியாக இருக்கலாம்

'என்னை யாரும் மட்டமாகப் பேசி இகழ்ச்சி செய்ய முடியாது' என்பார் ஓர் அறிஞர்.

இப்படித் தான் ஆரம்பிப்பதற்கு முன்பாகவே உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த வேண்டும். எந்த நிகழ்ச்சியோ மனிதரோ உங்களைப் பாதிக்க வேண்டாம்.

அப்படி இருந்தபோதிலும் உங்களால் அவதூறுகளைப் பொறுத்துக் கொள்ள முடியாவிட்டால்

(2) எண்ணங்களை நிறுத்திவிடுங்கள் கண்களை ஓய்வாக வைத்திருக்கும் முறைப்படி தேவையற்ற எண்ணங்களை நிறுத்தக் கற்றுக் கொள்ளுங்கள்.

அமைதியான மனம் இருந்தால் யாரும் எதுவும் உங்களுக்குத் தொல்லை தர முடியாது.

# இளைய தலைமுறையினருக்கு
## சுவாமி விவேகானந்தரின் அருளுரைகள்.

☆☆ எப்போதும் 'இல்லை' என்றோ, 'என்னால் முடியாது' என்றோ சொல்லாதே. நம்முடைய முயற்சிக்கு எப்போதும், துணை உண்டு. அதை இயல்பாக நீ பெறும்வரை உன் நெஞ்சில் உரம் குறைய வேண்டியதே இல்லை.

☆☆ உபநிடதங்கள் நம்முடைய மனவலிமையைப் பற்றித்தான் சொல்லுகின்றன. அதனால்தான் நான், எப்போதும் உபநிடதங்களிலிருந்தே மேற்கோள் காட்டிப் பேசுகிறேன். வேதம் , வேதாந்தம் எல்லாமே நாம் வலிமை பெறும் வழியைத் தான் கற்றுக் கொடுக்கின்றன.

☆☆ எப்போதுமே திரும்பிப் பாராதீர்கள்: உங்கள் பார்வை முன்னோக்கியே இருக்கட்டும். எந்த சமயத்திலும் பயந்து ஓடாதீர்கள். திரும்பி எதிர்த்து நில்லுங்கள். உங்களைத் துரத்திவரும் சக்திகள் ஓடிவிடும்.

☆☆ நன்மையை நாடிச் செல்லும் பாதை எப்போதும் உலகத்தில் கரடுமுரடானதாகவும் செங்குத்தாகவும் தான் இருக்கும். அதில் செல்வது எளிதல்ல. அதில் செல்லும் பலர் சறுக்கி விழுவது அதிசயமே இல்லை. ஒருசிலர் வெற்றி பெறுவது தான் ஆச்சரியம். நல்ல பண்பாளராக உங்களை அமைத்துக் கொள்ளுங்கள். அதற்காக நூறு தடவை தடுக்கி விழுந்தாலும் பரவாயில்லை.

☆☆ நமது உடம்புக்குள் சக்திவாய்ந்த எஃகுச்சுருள் ஒன்று அடங்கி இருக்கிறது. ஆன்மீக உணர்வு அந்தச் சுருளை விரியச் செய்து சக்தியை வெளிப்படுத்துகிறது. அப்போது அவன் சக்தி வாய்ந்த மனிதனாகிறான். அப்படிப்பட்ட மனிதனால் சமுதாயமே முன்னேறுகிறது.

☆☆ ஏழைகள் அப்பாவிகள், அவர்கள் முரட்டுத்தனத்தை அறியாதவர்கள். அதனால்தான் சொல்லுகிறேன். ஒரு ஏழைக் குடும்பத்தையாவது முன்னேறச் செய்வது ஒவ்வொரு இளைஞனின் குறிக்கோளாக இருக்க வேண்டும். அவர்களை முன்னுக்குக் கொண்டு வருவது சுலபம். அதுவே இறைவனுக்கு நாம் செய்யக்கூடிய சிறந்த சேவை.

☆☆ என்னுடைய நம்பிக்கை நவீனமான, எதிர்காலத்துக்குரிய இளைய தலைமுறையினரிடம்தான் இருக்கிறது. அவர்கள் தமது இன்னுயிரைக் கொடுத்தாவது ஆன்ம சக்தி பெறுவார்கள். பிறந்த பொன்னாட்டின் வளர்ச்சியையே தமது முன்னேற்றமாக நினைப்பார்கள். உலகம் ஒருநாள் அவர்களுடைய முயற்சியால் முழுமுன்னேற்றம் அடையும்.

*- சுவாமி விவேகானந்தர்*

# தேடுகிறீர்களா ?

ஒரு துறவி சாலையில் குனிந்து எதையோ தேடிக்கொண்டிருந்தார். மாலையில் வீடு திரும்பும் பலர் அவர் தேடுவதைப் பார்த்து உதவ எண்ணினார்கள். அவருடைய நல்ல குணங்களையும் பக்தி நிலையையும் அவர்கள் அறிவார்கள்.

"நீங்கள் எதனைத் தொலைத்துவிட்டீர்கள்?" என்று கேட்டார்கள்.

"ஒரு சிறிய ஊசியைத்தான் தொலைத்துவிட்டேன்." என்றார் துறவி.

தெருவிலே ஊசியைத் தொலைத்துவிட்டுத் தேடி எடுக்க முடியுமா? தயங்கிக்கொண்டே, "ஐயா! குறிப்பாக எங்கே ஊசி விழுந்தது என்று தயை கூர்ந்து சொல்ல முடியுமா?" என்று அவரிடம் கேட்டார்கள்.

"ஊசியினை வீட்டுக்குள்ளேதான் தொலைத்து விட்டேன்!" என்றார் அவர் அமைதியாக. அனைவருமே திகைத்துப் போனார்கள். வீட்டுக்குள்ளே தொலைந்து விட்ட ஊசியை, வெளியே தெருவில் தேடுவதாவது? பைத்தியக்காரத்தனமாக அல்லவா இருக்கிறது?

"வீட்டில் தொலைந்த ஊசியைத் தெருவில் தேடினால் கிடைக்குமா சுவாமி? நீங்கள் படித்தவர், ஞானியும் கூட நீங்களே இப்படிச் செய்யலாமா?" என்று கேட்டார்கள்.

"நீங்கள் எல்லோரும் எப்படிச் செய்கிறீர்களோ, அதைப் போலத்தானே நானும் செய்கிறேன்?" என்றார் துறவி நிதானமாக.

"நாங்கள் எல்லோருமே இப்படியா செய்கிறோம்? என்ன கூறுகிறீர்கள்? ஒருபோதும் நாங்கள் இப்படிச் செய்யவில்லையே?" என்று ஒரே குரலில் கேட்டார்கள்.

"ஆம்.... நீங்கள் எல்லோருமே இப்படித்தான் செய்கிறீர்கள். மனஅமைதியும், சந்தோஷமும் மனதிற்குள்ளே தான் இருக்கிறது. அப்படி இருக்க, நீங்கள் எல்லோருமே அதை வெளியில்தான் தேடிக் காலத்தையும் திறமையையும் வீணாக்கிக் கொண்டிருக்கிறீர்கள்!" என்றார் துறவி.

அனைவரும் பிரமித்துப் போய் நின்றார்கள்.

- பெரியவர் இராமமூர்த்தி

# நாம ஜெபம்

கண்ணாடிக்குள் ஒரு பிரதி பிம்பம் காண்கிறோம். அதன் நெற்றியில் திலகமிட்டால், நன்றாக இருக்கும் எனத் தோன்றுகிறது. நாம் என்ன செய்கிறோம்? கண்ணாடியில் தெரியும் பிரதி பிம்பத்துக்குப் பொட்டு வைத்தால் சரியாகுமா? அதற்கு மூலமாக வெளியிலே உள்ள உருவத்துக்குத் தான் பொட்டு வைக்க வேண்டும். அவை கண்ணாடியிலும் பிரதிபலிக்கும். இறைவனுக்கு என அர்ப்பணித்தால் எல்லா உயிர்களுக்கும் முறைப்படி கிட்டும்.

நாம் காணாத ஒரு நபருக்கு, பெயரும் விலாசமுமிட்டு, கடிதத் தொடர்பு கொள்வது போன்று, கடவுளைக் காணாவிட்டாலும், அவர் தம் திவ்ய நாமங்களை, சதா கூறித் தொடர்பு கொள்ளலாம். திரும்ப திரும்ப, மனதிலே சிந்தித்து வாயாரச் சொல்லி வருவதே ஜபம் ஆகும்.

'பிரத்தியாகரா' என்பது, நாம் இதுவரையில் என்னென்ன காரியங்கள் செய்தோமோ அதன் வழியே ஓடிக்கொண்டிருக்கும் மனத்தை, முதலில் அந்த வழியில் ஓட விடாமல் திருப்புவது. இப்படி நாம் விரும்புகிற நல்ல மாற்றுவழிக்குத் திருப்பி அமைக்கும் முயற்சி முதல் நிலையாகும்.

அதன்பிறகு 'தாரண' என்னும் பயிற்சி, நாம் இப்படித் திருப்பிவிடும் மனத்தை ஏதாவது ஒரு பொருளைக் குறியாக வைத்துக் கொண்டு, அதன்மீது நிறுத்தி வைக்கப் பழக வேண்டும். இது ஒரு விக்கிரகமாகவோ, படமாகவோ, சக்கரமாகவோ, இருக்கலாம். இப்படி நினைவை நிலைநிறுத்துவதற்கு 'தாரண' என்று பெயர். இது இரண்டாவது நிலையாகும்.

# நான்கு நிலைகள்

மூன்றாவது பயிற்சி தியானம் என்பது. மனம் எங்கிருந்து புறப்பட்டதோ, அங்கேயே திரும்பச் செய்து ஒடுங்க வைப்பதுதான் இப் பயிற்சி. மனம் என்பது நம்முடைய உயிராற்றல்தான். உயிர்ச்சக்தியின் படர்க்கைதான் மனமாக நிலைபெறுகிறது. புலன்களின் வழியே சென்ற மனத்தை மீண்டும் உள்ளே வாங்கிக் கொள்வதுதான் மூன்றாவது நிலையான தியானம் ஆகும்.

அதன் பிறகு எல்லாவற்றுக்கும் மேலான 'மெய்ப்பொருளுடன் மனத்தை ஒன்றவைத்து, நாமும் அதுவாக மாறிவிட வேண்டும். இந்த நிலையைத்தான் 'சமாதி' என்று சொல்லுகிறார்கள். இப்படி இறைவனுடன் ஒன்றிவிடுவதுதான் மனப்பயிற்சியில் முடிவானது.

இவ்வாறு பிரத்தியாகரா, தாரண, தியானம், சமாதி என்ற நான்கு நிலைகளையும் நமது முன்னோர்கள் மனத்தை வழிப்படுத்தும் நான்கு பயிற்சிகளாக முற்காலத்திலேயே ஏற்படுத்தி வைத்திருக்கிறார்கள்.

யோகிராஜ் வேதாத்திரி மகரிஷி

# குறிக்கோள்

மேலெழுந்த வாரியாகப் பார்க்கும்போது நேர்மையான வழி சிரமமானதாகவே தோன்றக்கூடும். ஆனால் ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால் அது அப்படி இல்லை என்பது புலனாகும். உண்மையோ, சத்தியமோ கடினமானது அல்ல. ஆனால் அதை கடைப்பிடிக்கவோ, பேசவோ முடிவெடுப்பதே கடினமாக இருக்கிறது. அப்படி முடிவெடுப்பதிலேயே நாம் தடுமாறுகிறோம். நமது வாழ்க்கையும் பொதுவாக ஓர் இயந்திர கதியிலேயே இயங்கி இருக்கிறது. அதிலிருந்து மாறுபட நம்மனம் துணிவதில்லை. அப்படித் துணிந்து விட்டோமானால், நம்முடைய வாழ்க்கையின் குறிக்கோள் சீராக அமைந்துவிடுகிறது. உண்மையைப் பேசுவதோ, அதன் படி செல்வதோ அப்போது எளிதாக நடந்துவிடுகிறது. 'சத்யம் வத' என்பது 'ஹிதம்வத' என்று கொள்ளப்படுவதே சரியாகும். அப்படி எடுத்துக் கொள்ளும் போது, சுயலாபங்களுக்கு இடம் கொடுக்கக்கூடாது. சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்ப, சமூகத்துக்கு நன்மை விளையும் விதமாக நல்ல முடிவுகளைத் தரும் எதுவுமே சத்தியத்துக்கு ஒட்டியதுதான் என்று எடுத்துக் கொள்ள வேண்டும்.

இதற்காக நாம் கொள்கைக்கு முரணாக நமது எண்ணங்களையும் செயல்களையும் மாற்றிச் சமாளிக்க வேண்டிய அவசியம் இல்லை. கொள்கைகளின் அடிப்படையை விட்டுக் கொடுக்காமலே, நன்மைகளை மட்டும் சாதிக்க முயலவேண்டும். என்ன ஆனாலும் சில காரியங்களைச் செய்ய ஒப்புக் கொள்வதில்லை என்ற மனத்துணிவுடன் காரியங்களைச் செய்ய வேண்டும். அப்போது நமது எண்ணங்களில் குழப்பம் இராது; செயல்களிலும் தெளிவு இருக்கும்.

- சுவாமி சுகபோதானந்தா

உடல் அழிந்து போய்விடும். ஆனால் உடலால் செய்யப்பட்ட காரியங்களின் பயன்கள் அழிவதில்லை.

## மனத் தூய்மை பெற வழிகள் !

முதலாவது - ஆசைகளை அப்படியே அழுத்தி அடக்கிவிட முயலக் கூடாது. அதற்காக நாம் நம்மையே இடித்துரைத்து வேதனைப் படவும் தேவை இல்லை.

இரண்டாவது - அந்த ஆசைகளை நல்ல நேர்மையான வழியில் நாம் ஈடேற்றிக் கொள்ள முடியுமானால் அப்படிச் செய்ய முயலவேண்டும்.

மூன்றாவது - நாம் அனுபவிப்பது எதுவானாலும் அதன் பலனைத் தெய்வத்துக்கே அர்ப்பணம் என்று விட்டுவிட்டால், அதன் பலாபலன்கள் நம்மை பாதிக்காது. எல்லாம் இறைவன் அருளால் கிடைப்பவை என்றும், நேருபவை என்றும் எண்ணிவிட்டால் மனம் தூய்மையாக இருக்கும், விளைவுகள் நம்மை பாதிக்காது.

நான்காவது - நம்முடைய மனம் நிம்மதி இன்றி அலைபாயும்போதும், ஆசைகளை நாடி ஏங்கும்போதும் இவ்வித உலக ஆசைகள் நம்மை ஆட்டி வைக்கின்றன. தியானம், யோகப் பயிற்சி, விரதம் ஆகியவை மூலம் உடலையும், உள்ளத்தையும் நாம் கட்டுப்படுத்தி வைக்க முடியுமானால், உலக ஆசைகள் நம்மை அலைக்கழிக்க முடியாது. திடமான உள்ளத்தையும், அதற்கேற்ற உடல் ஆரோக்கியத்தையும் பெறுவதால் நமக்கேற்ற உறுதியான மனப்பாங்கையும் நம்மால் அடைய முடியும்.

ஐந்தாவது - தூய்மையான, பக்குவப்பட்ட ஆசைகளில் ஈடுபடும்படி மனதைத் தயார் செய்து கொண்டால் கீழ்த்தரமான ஆசைகளை நம்முடைய மனம் நாடவே நாடாது. கலை, இயற்கை, அழகு, சங்கீதம், இலக்கியம் போன்றவற்றில் மனம் ஈடுபட்டால், மற்றப் புலன் உணர்வு பற்றிய ஆசைகள் நமக்குப் பிடிக்காமல் போய்விடும். அப்போது உயர்ந்த உள்ளத்துடனும் தியாக மனப்பான்மையுடனும், பிறருக்கு உதவ முற்படுவோம். நம்முடைய பண்புகளும் அதற்கேற்ப உயர்ந்துவிடும்.

கடைசியாக - நமது சகவாசம் நம்மை உயர்த்திவிடும். நல்லவர்களுடன் பழகுவதும், பேசுவதும், நல்ல நூல்களைப் படிப்பதும், நல்லவர்கள் உரையைக் கேட்பதும், நல்லவர்களுடைய (சத்சங்கம்) உறவில் ஈடுபடுவதும், நம்முடைய எண்ணங்களையும், செயல்களையும் தூய்மைப்படுத்திவிடும்.

---

கொள்கைகளும் கோட்பாடுகளும் நம்மைப் பிரித்துவைக்கும். பக்தி உணர்வு மட்டுமே அனைவரையும் இணைத்து வைக்கும்.

## வாசகர் பார்வையில் கோபுரம்

✈ மாசி '98 கோபுரம் அருமையான சமயக் கட்டுரைகளைத் தாங்கி உள்ளது. பெரியோர்களுக்கு மட்டுமன்றி, மாணவர்களுக்கும் பெரிதும் பயன் தரத்தக்கது. 'கோபுரத்தின்' பணி மேலும் தொடரவேண்டும்.

க. சண்முகபாலன்
(புரட்சிபாலன்)
திருகோணமலை.

✈ கோபுரம் மாசி '98 இதழ் வாசித்து மகிழ்ந்தேன். சிறந்த கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. உயர்வகுப்பு இந்துமாணவர்க்கு மிகவும் பயன்மிக்க இதழ்.

ம. கேதீஸ்வரன்
இந்துக் கல்லூரி
வாழைச்சேனை.

✈ கோபுரம் மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ள ஆக்கங்களைக் கொண்டுள்ளது. தொடர்ந்து இதழை வாசிக்க ஆவலாக உள்ளேன்.

வனஜா திருபாலசிங்கம்
கிருலப்பனை
கொழும்பு - 6

✈ கோபுரம் மாசி 98 இதழ் வாசித்தேன். அருமையான ஆன்மீக இதழாகத் திகழ்கிறது. சிறுவசனங்கள் கூட ஆழ்ந்த பொருள் கொண்டவை. கோபுரம், கோபுரமாக உயர வாழ்த்துக்கள்.

கே. சுபாஷினி
ரத்தொட்டை வீதி
மாத்தளை.

✈ கோபுரம் மாசி 98 இதழ் மிகவும் உயர்நத பல அம்சங்களைக் கொண்டு திகழ்கிறது. இந்துசமயம், இந்துநாகரிகம் கற்பிக்கும் ஆசிரியை என்ற முறையில் நான் மிக்க பயன் பெறுகின்றேன். எனது இதழை நூலகத்திற்கு வழங்கி பலரும் வாசிக்கச் செய்கின்றேன்.

திருமதி. ஜெகதீஸ்வரி நாதன்
தம்பிலுவில் - 2

---

## வழிபட ஏற்ற நேரம்

காலைதான் இறைவழிபாட்டுக்கு ஏற்ற நேரம். காலையில் மனம் தெளிந்து இருக்கும். அப்போது இறைவனை வழிபடுவது நல்லது. வெள்ளைத் துணியில் சாயம்படுவது போல் தெளிந்த உள்ளத்தில் இறையுணர்வு படியும். சூரிய வணக்கம் செய்த பிறகு வழிபாடு செய்ய வேண்டும்.

மாலையில் கோயில் வழிபாடு செய்யலாம். இரவு படுக்கப் போகுமுன் தியானம் செய்யலாம்.

- வாரியார் சுவாமிகள்

# தியானத்தின் மூன்று படிகள்

தாரணை, தியானம், சமாதி என மூன்று படிகள் உள்ளன.

ஒரு பொருளின் மீது மனதைக் குவியச் செய்வதற்கு மேற்கொள்ளும் முயற்சியே தாரணையாகும்.

மனது தடுமாறாமல் ஒரு பொருளின் மீது மனதைக் குவித்து நிலை நிறுத்துவது தியானம் எனப்படும்.

நிலை நிறுத்திய பிறகு அந்தப் பொருளுக்கும் மனதுக்கும் உள்ள வேற்றுமை மறைகிற உயர்நிலைக்கு சமாதி எனப் பெயர். தியானத்தில் பொருளும் மனதும் ஒன்றுபடுகின்றன. எல்லாப் புலன்களும் செயல்புரியாமல் நின்று அவற்றின் மூலம் செயல்பட்ட சக்தி திரண்டு மனதின் மீது குவிக்கப்படுகிறது.

பொருள் அப்போது முழுமையாக மனதின் சக்திக்கு உட்பட்டது. இந்த ஆற்றல் அடையப்பட வேண்டும். அது யோகிகளால் நடத்தப்படும் பெரிய விளையாட்டு.

- விவேகானந்தர்.

## வடிகட்டிய மடமை

ஒரு மருமகள் வீட்டுக்கு வருகின்ற அதே ஆண்டில் மாமியார் காலமானதைக் கண்டு, "இந்தச் சனியன் வந்து மாமியாரை விழுங்கி விட்டாள்." என்று சிலர் கூறுகின்றார்கள்.

ரயிலில் ஏறும்போதே இறங்கும் ஸ்டேஷனை நிச்சயப்படுத்தி டிக்கெட் வாங்கிவிடுவதைப் போல், ஓர் உயிருக்குப் பிறப்பதற்கு முன்னே இறப்பு நிச்சயமாகி விடுகிறது.

ஆதலால் மருமகள் வந்ததற்கும் மாமியார் மாள்வதற்கும் சம்பந்தமே கிடையாது. மருமகள் மாமியாரை விழுங்கிவிட்டாள் என்று கூறுவது வடிகட்டிய மடமையாகும்.

நாம் அனுபவிக்கும் துன்பங்களுக்கு நம் வினை காரணமேயன்றி மற்றவர்கள் அல்லர். ஆதலின் எவரையும் நோவாதே.

- வாரியார் பொன்மொழி

# வாழ்க்கை என்னும் சீட்டாட்டம் !

வாழ்க்கை என்பது சீட்டாட்டம் போல. அதில் நாம் ஆட வேண்டிய சீட்டுக்களை நாமே ஆட்ட விதிகளின்படி கலைத்துப் போட்டுக் கொள்கிறோம். கலைப்பதும் போடுவதும் நாமேயானாலும் கூட, நமக்குத் தேவையான இஷ்டப்பட்ட சீட்டுக்களை நாமே போட்டுக் கொள்ள முடியாது. எது கிடைத்தாலும் அதை ஏற்றுக் கொள்ள வேண்டியதுதான். ஆனால் ஆட்டத்தை நம்மால் இயன்றவரை சிறப்பாக ஆடி ஜெயிக்க முயல வேண்டும். அதற்குரிய சுதந்திரம் நம்மிடம் தான் இருக்கிறது. நாம் எப்படி வேண்டுமானாலும் ஆடலாம். ஆனால் கிடைத்த சீட்டுக்களைத்தான் பயன்படுத்த வேண்டும். விதி என்பது நாம் நமது சீட்டுக்களை நாமே கலைத்துப் போட்டுக் கொண்டதைப் போன்றது. குறிப்பிட்ட குடும்பத்தில் பிறப்பது, குறிப்பிட்ட அளவு திறமையை அடைவது, அதற்கேற்ற உருவத்தையோ பண்புகளையோ பெறுவது, குறிப்பிட்ட சூழ்நிலையில், சந்தர்ப்பங்களில் வளருவது, புத்திசாலித்தனத்தையும், மனோதிடம், உடல் ஆரோக்கியம், எண்ணங்களின் வளம் ஆகியவற்றைப் பெறுவது ஆகியவை யாவும் இப்படி அமைபவைதாம். ஆடும்போது இருக்கும் சீட்டுக்களை வைத்துக் கொண்டு சாமர்த்தியமாக ஆடுவதைப் போல, கிடைத்ததை மிகுந்த அளவு சாமர்த்தியமாக உபயோகப்படுத்தி, அதிக அளவு வெற்றியை அடைய முயலுகிறோம். இதில் ஒரு நிலையில், ஒரு முயற்சியில், வாழ்க்கையின் ஓர் அம்சத்தில் வெற்றி கிடைக்காவிட்டாலும் நாம் மனம் தளர வேண்டியதில்லை. நமது முயற்சியின் அனுபவத்தால் இன்னொன்றில் நமக்கு நிச்சயமாக வெற்றி கிடைக்க வாய்ப்பு உண்டு. ஒரு நாள் ஒவ்வொரு ஆட்டத்திலும் வெற்றிபெறும் சாமர்த்தியம் நமக்குக் கிடைக்கக் கூடும்.

விதி என்பது நாம் நமது சீட்டுக்களை நாமே கலைத்துப் போட்டுக் கொண்டதைப் போன்றது. குறிப்பிட்ட குடும்பத்தில் பிறப்பது, குறிப்பிட்ட அளவு திறமையை அடைவது, அதற்கேற்ற உருவத்தையோ பண்புகளையோ பெறுவது, குறிப்பிட்ட சூழ்நிலையில், சந்தர்ப்பங்களில் வளருவது, புத்திசாலித்தனத்தையும், மனோதிடம், உடல் ஆரோக்கியம், எண்ணங்களின் வளம் ஆகியவற்றைப் பெறுவது ஆகியவை யாவும் இப்படி அமைபவைதாம்.

ஆகவே வாழ்க்கையில் நமக்குப் பூர்வஜென்ம பலனாகக் கிடைப்பவை, நமக்குக் கிடைக்கும் சீட்டுக்களைப் போலத்தான். அதை வைத்துக் கொண்டு ஆடி வெற்றிபெற முயலும் யத்தனம் நம்முடைய கையில் தான் இருக்கிறது. அந்த சாமர்த்தியத்தை நாம் எப்படி அடைவது? அதற்காகவே நாம் ஞானியரையும், ஆசாரியர்களையும் தேடிப் போகிறோம். அவர்கள் அறிவால், அனுபவத்தால் வெற்றியைக் கண்டவர்கள். அதனால் அவர்கள் நமக்கு வெற்றிப்பாதையை அடைய வழிகாட்டுவார்கள். கையில் உள்ள சீட்டை வைத்துக் கொண்டு வெற்றி அடைவதைப்போல, நமக்கு கிடைத்ததை வைத்துக் கொண்டு வெற்றிக்கு வழிகாண உதவுவார்கள். இப்படி ஒரு வழியைப் பின்பற்றும் மனப்பக்குவத்தை அடைவதற்குத்தான் சமயச்சார்பும், ஆன்மிக வழிகளும் உதவுகின்றன.

- சுவாமி சாந்தானந்தா

# மூன்று வித கர்மாக்கள்

மூன்றுவித கர்மாக்கள் நமது வாழ்க்கையில் இடம் பெறுகின்றன. அவை பிராரப்த, சஞ்சித, ஆகாமியக் கர்மாக்கள் ஆகும். பிராரப்த கர்மா என்பது முன்ஜென்ம வினைப் பயனாகத் தொடர்ந்து வருவது. நம்முடைய இந்த ஜன்மத்துக்கு இது அடிப்படையாகும். சஞ்சித கர்மா என்பது அனாதிகாலம் தொட்டு நாம் தேடிச் சேமித்து அடைவது. இந்தப் பிறவியில் நாம் செய்யும் வினைகளைப் பொறுத்து ஆகாமிய கர்மா அமைகிறது. பிராரப்த கர்மா நம்முடைய வாழ்க்கையின் அடிப்படையாக அமைவது. உண்மை என்றாலும் அதிலேயே நாம் முழுவதுமாகக் கட்டுப்பட்டு இருக்க வேண்டியதில்லை. நான் ஆக்கபூர்வமாக எனது சுதந்திரமான எண்ணப்படி செயற்படுத்தக்கூடிய நோக்கம் புருஷார்த்தம் எனப்படுவது. எந்த அளவுக்கு நான் என்னுடைய வாழ்க்கையை வெற்றிகரமாக அமைத்துக் கொள்ள இயலும் என்பதற்கு வழிகாட்டுகிறது. சில சமயங்களில் நடப்பவை என்னுடைய திட்டங்களையும் செயலையும் மீறியவையாக இருக்கின்றன. நாம் சாலையில் போகும்போது, நாம் ஒழுங்காகப் போனாலும் விபத்தில் சிக்கிக் கொள்கிறோம் அல்லவா? அதைப் போல! ஆனால் அதை நாம் எப்படி எடுத்துக் கொள்கிறோம் என்பதை நிச்சயிப்பதே புருஷார்த்தம். ஓரளவுக்கு அந்த விளைவை, அதன் பாதிப்பை என்னால் மாற்ற முடியும்.

> விசைப்படகு இருந்தாலும் ஆற்று நீரோட்டத்தின் இயற்கையை நாம் மாற்றப் போவதில்லை. ஆனாலும் நமக்குச் சாதகமான விதத்தில் படகின் திசையையும் வேகத்தையும் மாற்றி அமைத்துக் கொள்ள முடிகிறது. அதேபோல பிராரப்த கர்மாவின் விளைவுகள் இருந்தாலும், புருஷார்த்தம் நம்முடைய வாழ்க்கையை நமக்குச் சாதகமாக மாற்றித் தர முடியும்.

உதாரணமாக ஆற்றில் நீரோட்டம் நம்மை ஒரு திசையில் இழுத்துச் செல்லுகிறது. அந்தத் திசையைப் பற்றிய நீரோட்டத்தை நம்மால் மாற்ற முடியாது. ஆனால் நாமும் ஒரு மின்விசைப் படகில் உட்கார்ந்து நீரோட்டத்துக்கு எதிரான திசையில் போவதாக வைத்துக் கொள்வோம். அப்போது ஆற்று நீரோட்டத்தின் சக்தியையும் திசையையும் மாற்றாமலே நம்மால் விரும்பிய திசையிலும் வேகத்திலும் போகமுடியும். அந்த விசைப் படகு இல்லாமல் நம்மால் இதைச் சாதிக்க முடியாது. விசைப்படகு இருந்தாலும் ஆற்று நீரோட்டத்தின் இயற்கையை நாம் மாற்றப் போவதில்லை. ஆனாலும் நமக்குச் சாதகமான விதத்தில் படகின் திசையையும் வேகத்தையும் மாற்றி அமைத்துக் கொள்ள முடிகிறது. அதேபோல பிராரப்த கர்மாவின் விளைவுகள் இருந்தாலும், புருஷார்த்தம் நம்முடைய வாழ்க்கையை நமக்குச் சாதகமாக மாற்றித் தர முடியும். நாம் எப்படி எடுத்துக் கொள்கிறோம் என்பதைப் பொறுத்தே புருஷார்த்தம் அமைகிறது. அது திடமானதாக மனஉறுதியுடன் அமைந்தால் நிச்சயமாக நம்முடைய முயற்சிக்கு நல்ல பலன் கிடைக்கும். எவ்வளவு தூரம் ஈடுபட்டு முழுமனத்துடன் பிரயத்தனம் செய்கிறோம் என்பதைப் பொறுத்து இது அமைகிறது. பிராரப்தத்தின் இயல்பான சக்தியை குறைக்காமலேயே, புருஷார்த்தம் நமக்குச் சாதகமான விளைவுகளை ஏற்படுத்தச் செய்யலாம்.

– சுவாமி சுகபோதானந்தா

## நீத்தார் நினைவு



உதயம்
21.05.1954

அஸ்தமனம்
10.07.1998

## திருமதி திரேசா ஜெயசீலி தேவேந்திரன்

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வவுனியா மாவட்ட கலாசார அலுவலராகக் கடமை புரிந்த திருமதி ஜெயசீலி தேவேந்திரன் அவர்கள் ஜுலை மாதம் 10 ம் திகதி இயற்கையெய்தினார்.

வவுனியா மாவட்டத்தில் திணைக்களத்தின் கலாசார சமயப் பணிகளை முன்னெடுத்துச் செல்வதில் அன்னார் சிறப்பான பணிகளை ஆற்றினார்.

அவர்தம் மறைவு கணவர், பிள்ளைகள், உறவினருக்கு மட்டுமன்றி திணைக்களத்திற்கும், வவுனியா பிரதேச மக்களுக்கும் பேரிழப்பாக அமைந்தது.

அன்னாரின் மறைவால் துயருறும் குடும்பத்தார், உறவினர் அனைவருக்கும் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஆழ்ந்த அநுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் ஆன்மா சாந்தியடைவதாக.

பணிப்பாளரும்,

திணைக்கள உத்தியோகத்தர்களும்.

# விற்பனைக்குள்ள நூல்கள்

| | | | |
|---|---|---|---|
| 01. | நாவல் கலை | தி. ஜானகிராமன் | 75.00 |
| 02. | இதழாளர் பாரதி | முனைவர் பா. இறையரசன் | 150.00 |
| 03. | இராஜம் கிருஷ்ணன் புதின -ங்களில் சமுதாய மாற்றம் | டாக்டர் நா. நளினிதேவி | 137.50 |
| 04. | நவீனத்தமிழும் பின் நவீனத்துவமும் | தமிழவன் | 125.00 |
| 05. | இந்திய விடுதலையின் இறுதி நாட்கள் | தார்க்ஷியா | 130.00 |
| 06. | மானுட தரிசனங்கள் | எஸ் அகஸ்தியர் | 105.00 |
| 07. | கு. அழகிரிசாமி கடிதங்கள் | கி. இராஜநாராயணன் | 40.00 |
| 08. | புதுக்கவிதையில் இலக்கிய இயக்கம் | முனைவர் இரா. சம்பத் | 150.00 |
| 09. | தமிழ்ச்சிறுகதைகள் ஒரு மதிப்பீடு | க. செந்தில்நாதன் | 45.00 |
| 10. | அரசு-குடும்பம்-பெண்ணியம் | (தொகுப்பு) | 78.00 |
| 11. | கரிசல் | பொன்னீலன் | 57.50 |
| 12. | மோகமுள் | தி. ஜானகிராமன் | 335.00 |
| 13. | வ.உ.சி. வரலாறும் இலக்கியப் பணிகளும் | சு. சங்கரவள்ளிநாயகம் | 120.00 |
| 14. | கலையும் சமுதாயமும் | செ. கணேசலிங்கன் | 55.00 |
| 15. | நற்றிணை | முதற்பகுதி | 87.50 |
| 16. | பாரதிதாசனின் புதிய நாடகங்கள் | டாக்டர் சு. இளங்கோ | 62.50 |
| 17. | மலர் மஞ்சம் | தி. ஜானகிராமன் | 212.50 |
| 18. | பாரதிதாசன் பாடல்கள் | - | 87.50 |
| 19. | வரலாற்றுப்போக்கில் தென்னகச் சமுகம் (சோழர் காலம்) | நொபொரு கராஷிமா | 375.00 |
| 20. | மாடும் கயிறுகள் அறுக்கும் | இ. முருகையன் | 65.00 |
| 21. | புதுவீடு, புது உலகம் | கு. அழகிரிசாமி | 191.25 |
| 22. | சர்க்கரை | கு. சின்னப் பாரதி | 100.00 |

இவற்றுடன் ஆன்மீக, தமிழ்த்துறை சார்ந்த நூல்கள், திணைக்கள வெளியீடுகள் என்பன திணைக்கள விற்பனை நிலையத்தில் விற்பனைக்குள்ளன. காரியாலய நாட்களில் காலை 9 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரை இவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

Printed By : Mario Printers 173, Jampettah Street, Col- 13. Tel 432452

# O. S. S.

To :

G.Sivakumar Esqr.,
4, Jeyaratna Mawatha
Thimbirigasyaya
COLOMBO 5

From :
The Director,
**Department of Hindu Religious & Cultural Affairs**
98, Ward Place,
Colombo - 7.